Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 22 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 முஹறம் 13 (05.03.2004) வெள்ளிக்கிழமை இதழ் :156

- 5 MAR 2004

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து

WESTERN UNION | MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்

மூலம்

வங்கிக் கணக்கு தேவையில்லை.

தரகு (Commission) ஏதுமில்லை.

எந்நேரமும் சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க எம்மிடம் நாடுங்கள்

ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்

303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 5392
Fax : 222 3214
E - Mail :- smskr @ eureka.lk

சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 0602212472

(சி/2228)

# கிழக்கு நெருக்கடி தற்காலிகமானதே; மிக விரைவில் தீர்வு காணப்பட்டுவிடும்!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

**கிழக்கில் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி தற்காலிகமானதே இந்த நெருக்கடிக்கான தீர்வு மிகவிரைவில் எட்டப்பட்டு விடும் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டேயுடனான சந்திப்பின்போது, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

**போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே மற்றும் பிரதித்தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் ஆகியோர் நேற்றுக் காலை கிளிநொச்சிக்கு வந்தனர்.**

விமானப்படை ஹெலிஹொப்ரர் மூலம் காலை 11மணியளவில் கிளிநொச்சிக்கு வந்த இவர்கள் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கிழக்கு மாகாண அரசியற்துறைப்பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனும் கலந்துகொண்டார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பான விடயங்கள் மற்றும் கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலவரங்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)



கண்காணிப்புக்குழுத் தலைவர் தலைமையிலான குழுவினர் தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவை சந்தித்துப் பேச்சு நடத்துகின்றது.

## ஐ.தே.கவினால் மட்டுமே சமாதானத்தை எட்டமுடியும்

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஒளிமயமான எதிர்காலம் ஒன்று ஏற்படவேண்டுமாயின் சமாதானம் அவசியமான ஒன்று என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மஹரகமவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

அரசியல் தீர்வுக்கானபாதை - போர்நிறுத்த உடன்படிக்கையில் தங்கியுள்ளது. நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டுமாயின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்பட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வட-கிழக்கில் நடத்தப்படும் தேர்தல் சுதந்திரமானதாக அமைய வேண்டும்

### யாழ்.ஆயர் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் நடக்கவிருக்கின்ற பொதுத்தேர்தல் வன்முறைகளும், குழப்பமும் அற்ற சுதந்திரமான நேர்மையான பொதுத் தேர்தலாக இருக்கவேண்டும் என்பதே எமது விருப்பம்.

இவ்வாறு யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினால் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இராணுவக் கட்டுப்பாட்டில்லாத பகுதிகளில் இருக்கின்ற மக்கள் அவர்களின் தவறு இல்லாமல், நீண்ட காலமாக தேர்தலில் பங்கு பற்றும் வாய்ப்பை இழந்தவர்களாக இருக்கின்றார்கள். அரசாங்க பரீட்சைகளான க.பொ.த (சா/த), க.பொ.த. (உ/த) ஆகிய பரீட்சைகள் கல்வித் திணைக்களத்தினால் ஒழுங்காக நடத்தப்படுகின்றன. அரச நிறுவனங்களும், கச்சேரிபோன்ற நிறுவனங்களும் ஒழுங்காக நடைபெறுகின்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வன் செயல்களற்ற ரீதியில் தேர்தல் நடத்தப்பட வேண்டும்

## எலும்புக் கூடுகளுக்கு அருகில் பெண்களின் உடைகளும் மீட்பு!

சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்பட

(12 ஆம் பக்கம் பார்க்க)

நாயகம் ஆண்டகையினால் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்

# வன் செயல்களற்ற ரீதியில் தேர்தல் நடத்தப்பட வேண்டும்

## ஐரோப்பிய யூனியன் முன்னாள் கண்காணிப்பாளர்

(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தல், வன்முறைகளற்ற முறையில் நீதியாகவும், நேர்மையாகவும் நடத்தப்படவேண்டும்.

இவ்வாறு ஐரோப்பிய யூனியனின் முன்னாள் கண்காணிப்பாளர் ஜோன் குஷ்னாகன் தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்ததாவது -

சகல அரசியற்கட்சித்தலைவர்களும் இந்த விடயத்தில் மிகவும் பொறுப்புணர்வுடன் நடப்பதனை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்கு வன்செயல் ஒரு பகுதியல்ல. வன்செயல் என்பது ஜனநாயகத்தின் கருத்துக்களுக்கு நேர்மாறானதாகும். தேர்தல் காலத்தின் முதல் இரண்டு வாரங்களில் 158 வன்முறைச் சம்பவங்கள் நடந்துள்ளன. இது மிகவும் வருத்தத்திற்குரியது.

இதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் லொறி மோதி பாடசாலை மாணவி மரணம்

(மானிப்பாய்)

லொறி மோதியதில் மாணவி ஒருவர் அவ்விடத்திலேயே பரிதாபகரமாக மரணமானார்.

இந்தச்சம்பவம் நேற்றுக்காலை திருகோணமலை உப்புவெளிப்பிரதேசத்தில் இடம்பெற்றது. சம்பவத்தின்போது க.அச்சுதா (வயது 10) என்ற மாணவியே மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

அச்சுதா தனது சகோதரனுடன் புனித சவேரியார் வித்தியாலயத்திற்கு சென்றுகொண்டிருந்த போது பின்புறமாக வந்து கொண்டிருந்த லொறி இவர்கள் மீது மோதியது.

இதனையடுத்து அந்த இடத்திலேயே மாணவி மரணமானார். இவரது சகோதரன் 12வயதை உடைய க.சிவதர்சன் படுகாயமடைந்தார். இவர் தற்போது திருகோணமலை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

# எலும்புக் கூடுகளுக்கு அருகில் பெண்களின் உடைகளும் மீட்பு!

## நீதிமன்றில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி வீதி, கல்வியங்காட்டுப் பகுதியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளுடன் பெண்கள் அணியும் உள்ளாடைகளும் காணப்பட்டன என யாழ்.நீதிமன்றில் நேற்று வாக்குமூலமளித்த மிதிவெடி அகற்றும் பிரிவின் ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் நேற்று மாலை சாட்சியமளித்த வேளையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவரது வாக்குமூலத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

கடந்த புதன்கிழமை செம்மணி வீதி, கல்வியங்காட்டுப் பகுதியில் வெடிப்பொருளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் பல வெடி பொருள்களைக் கண்டோம். அவற்றை அப்புறப்படுத்திக்கொண்டிருந்தபோது சில எலும்புக்கூடுகள் தென்பட்டன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பி வேட்பாளர் மீது கைக்குண்டுத் தாக்குதல்!

## கல்முனையில் சம்பவம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் கல்முனைப்பிரதேசத்தில் தேர்தல் பிரசார துண்டுப் பிரசுரங்களை வர்த்தக நிலையங்களுக்கு விநியோகித்துக்கொண்டிருந்த ஈ.பி.டி.பி உறுப்பினர் மீது இனந்தெரியாதவர்களால் கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்றுப்பகல் 12.45 மணியளவில் நடத்தப்பட்ட இந்த கைக்குண்டுத் தாக்குதலில் ஈ.பி.டி.பியின் அம்பாறை மாவட்ட வேட்பாளரான துரைராஜா லால் மற்றும் பொது மக்களான திருக்கோவிலைச்சேர்ந்த மார்முத்து நடராஜா, கல்முனையைச்சேர்ந்த எ.ஜி.எ.றகின், முகமட் பாருக் ஆகியோர் காயமடைந்தனர்.

இதில் ஈ.பி.டி.பியின் வேட்பாளர் அம்பாறை போதனா வைத்திய(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
mail :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

## வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்படவேண்டிய பெயர் விபரங்களை விரைவாக அனுப்பி வைக்கக் கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கபபடவேண்டிய பெயர் விபரங்களை விரைவாக அனுப்பிவைக்குமாறு யாழ்.மாவட்டத் தேர்தல் திணைக்களம் கிராமசேவையாளர்களைக் கோரியிருப்பதாக யாழ்.மாவட்டத் தேர்தல் ஆணையாளர் எஸ்.நடராஜா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேர்தலில் தவறுகள் இடம்பெறாமல் இருப்பதற்கு கட்சிகளைச் சேர்ந்தவர்களும், வேட்பாளர்களும் உறுதியுடன் செயற்படவேண்டும். அப்படிச் செயற்பட்டால்தான் கள்ளவாக்குப் போடுதல், ஆள்மாறாட்டம் செய்தல் முதலான தவறுகளை தடுக்க முடியும.

தேர்தல் நேர்மையாகவும், நீதியாகவும் நடைபெறவேண்டுமானால்- வேட்பாளர்களும், வாக்காளர்களும், தேர்தல் கடமையில் ஈடுபடும் அதிகாரிகளும் உண்மையான முறையில் நடந்துகொள்ள வேண்டும்.

தேர்தல் தவறுகள் நடக்காமல் இருப்பதற்கு, எமக்கு கிராமசேவையாளர்களும் துணைபுரிய வேண்டும். ஏனெனில், கிராமசேவையாளர்களே இறந்துபோனவர்கள் மற்றும் புதிய வாக்காளர்களைப் பற்றிய விபரங்களையும், தமது பகுதியில் வசிக்கும் வேட்பாளர்கள் பற்றியும் தெரிந்து வைத்திருப்பவர்கள்.

இந்த விபரங்களைத் திரட்டித் தருமாறு அவர்களைக் கோரியுள்ளோம். அவர்கள் விரைவாக அவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

அத்தோடு - நீதியான தேர்தலுக்கும் அவர்கள் உதவவேண்டும். தேர்தலில் எந்தவொரு தவறும் நடக்காமல் இருப்பதற்கான முன் ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கவனமாகவுள்ளோம்.

வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்படவேண்டிய விபரங்களைச் சரியான முறையில் வழங்குமாறு கிராம சேவையாளர்களைப் பணித்துள்ளோம். அவர்களில் சிலர் அந்த விபரங்களைத் தந்துவிட்டார்கள்.

எனவே, விரைவாக ஏனைய கிராமசேவையாளர்களும் அந்த விபரங்களைத் தந்து உதவினால் எமது பணிகளைத் தொடர்வதில் சிக்கலிருக்காது என நம்புகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## கலாசார அலுவலர் பரீட்சை ஜூலை மாதம் ஒத்திவைப்பு!

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவலர், ஆராய்ச்சி அலுவலர்களுக்கான போட்டிப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கலாசார அலுவலர், ஆராய்ச்சி அலுவலர் பதவிகளுக்கான போட்டிப்பரீட்சை இந்தமாதம் 13ஆம், 14ஆம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. தவிர்க்க முடியாத காரணங்களால் இப்பரீட்சைகள் ஜூலை மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள கலாசார அலுவலர், ஆராய்ச்சி அலுவலர் பரீட்சைகள் நடைபெறும் திகதி, பரீட்சை நடைபெறும் பரீட்சை நிலையம் போன்ற விபரங்கள் பின்னர் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் தெரிவித்தார்.

## வெளிவாரிப் பரீட்சைகள் 15 இல் குழம்பிய நிலையில் பரீட்சார்த்திகள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் இந்தமாத நடுப்பகுதியில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டதை அடுத்து அரச அலுவலகங்களில் பணியாற்றும், பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் பலர் குழப்பமடைந்துள்ளனர்.

மேற்படி பிரிவில் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் கலைமாணி பகுதி II, சிறப்புக்கலைமாணி பகுதி II ஆகிய பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்களில் பலர் அரச அலுவலகங்களில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களே.

இந்த நிலையில், நடைபெறவுள்ள பொதுத்தேர்தலை முன்னிட்டு அரச திணைக்களங்கள், அதிகாரசபைகள், கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் ஏப்ரல் 2 ஆம் திகதி வரை விடுமுறை பெறமுடியாது எனவும், அவ்வாறு விடுமுறை பெறப்பட வேண்டுமாயின் மாவட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் சுற்றுநிருபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி நிலைமையைச் கருத்தில் கொண்டு அலுவலங்களில் பணியாற்றும் ஊழியர்களும் பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு மாற்று ஏற்பாடுகள் எடுக்கப்படுமா என பரீட்சார்த்திகள் கவலை தெரிவிக்கின்றனர். (44)

## இடம்பெயர்ந்த மக்களை பதிவு செய்யக்கோரிக்கை

தெல்லிப்பழை பிரதேசத்திலும் அதனை அண்டிய உயர்பாதுகாப்பு வலயங்கள் அமைந்துள்ள ஏனைய கிராமங்களிலும் நிரந்தரமாக வசித்து தற்போது இடம்பெயர்ந்து யாழ்ப்பாணக்குடாநாட்டின் பல பகுதிகளிலும் வாழ்கின்ற மக்களின் பெயர் விபரங்களை திரட்டும் பணியில் வலி. வடக்கு பிரதேச செயலகம் ஈடுபட்டுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபரின் பணிப்பின் பேரிலேயே இந்தத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத வலி வடக்கின் நிரந்தர குடியிருப்பாளர்களை உடனடியாக தெல்லிப்பழை பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (101)

### சொந்த இடத்தில் சமுர்த்தி வங்கி

(சுதுமலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வலயம் I (மானிப்பாய்) சமுர்த்தி வங்கியானது மிக விரைவில் அதனது சொந்தக் கட்டடத்தில் இயங்கவுள்ளதாக தெரிய வருகின்றது.

கட்டுடையில் அமைக்கப்பட்டு வரும் இந்தச்சமுர்த்தி வங்கியானது இன்னும் சில நாட்களில் கட்டட வேலைகள் அனைத்தும் முடிந்து விடும் எனவும் அந்த வேலைகள் முடிவடைந்ததுடன் இந்தவங்கி தனது நிரந்தரக் கட்டடத்தில் தனது பணிகளை ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (44)

### சமாதான கருத்தரங்கு

கியூடெக் நிறுவனத்தால் சமாதானக் கல்விக் கருத்தரங்கும், த[illegible]மைத்துவ பயிற்சியும் நடாத்தப்படவுள்ளது. கொக்குவில் ஸ்ரீ அம்பாள் சனசமூக நிலையத்தில் அந்தப்பகுதியைச் சேர்ந்தவர்களிற்கு நாளை மறுதினம் காலை சமாதானக் கல்விக் கருத்தரங்கும் அன்று முழுநாள் தலைமைத்துவப் பயிற்சி குப்பிளான் பகுதியிலும் இடம்பெறவுள்ளது.

கியூடெக் நிறுவனத்தின் சமாதானக் குழுவினரால் இந்நிகழ்வுகள் நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (91)

## எமது இராணுவ பலத்தை உணர்ந்தது போலவே அரசியல் பலத்தையும் சர்வதேசம் தேர்தலுக்குப் பின்னர் உணரும்!

### செம்மணன் தெரிவிப்பு

எமது இராணுவ சமபலத்தை சர்வதேசம் இன்று உணர்ந்துள்ளது. அரசியல் ரீதியான இராஜதந்திர நகர்வுகளை அவதானித்து வரும் சர்வதேசம் நடைபெறப்போகும் தேர்தலின்பின் எமது அரசியல் பலத்தையும் விளங்கிக்கொள்ளும் இதற்கு ஒவ்வொருவரும் தமது முழுமையான ஆதரவை வழங்கவேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்தார்.

தீவக மகளிர் அமைப்புகளின் சங்கம நிகழ்வு வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது. தீவக மகளிர் குழுக்கள் பல கலந்துகொண்ட இந்த நிகழ்வில், யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற வேட்பாளர்கள் ஸ்ரீகாந்தா, திருமதி.பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு செம்மணன் மேலும் தெரிவித்ததாவது -

தீவகப் பகுதியில் கடந்த காலங்களில் மக்களை ஏமாற்றி தமது சுயநலன்களுக்காக அவர்களை திசை திருப்பியவர்களுக்கு மக்கள் நல்ல பாடம் புகட்ட வேண்டும்.

எனவே, வரப்போகும் தேர்தலை சரியான முறையில் எதிர்கொண்டு தகுதியானவர்களை இனம்காட்ட பூரணமாக உழைக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

இன்று தேசியத் தலைவர் விடுதலையை வீட்டுவாசல் வரை கொண்டு வந்து விட்டுள்ளார். கதவைத் திறந்து அதனை உள்ளே அழைப்பது எமது ஒவ்வொருவரதும் பொறுப்பு, இதில் நாங்கள் எல்லோரும் பங்காளிகளாக வேண்டுமென நாடாளுமன்ற வேட்பாளர் ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

இதற்காகவே இன்று அரசியல் பேதங்களை மறந்து கட்சிக்கொள்கைகளுக்கு அப்பால் நாம் எல்லோரும் ஒன்றாக உழைக்கிறோம். தேசிய ஒற்றுமைக்காக செயற்பட முன்வந்துள்ள நாங்கள் எமது இன விடுதலைக்கான இலக்கை நோக்கி நகர்கிறோம். எனவே ஒவ்வொருவரும் தேசிய ஒற்றுமையை ஏற்படுவதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஸ்ரீகாந்தா குறிப்பிட்டார். (93)




### வீடு விற்பனைக்கு உண்டு

சுதுமலையில் மாடிவீடு ஒன்று விற்பனைக்கு உண்டு.

வாங்க விரும்புவோர் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன், கீழே குறிப்பிடும் நேரத்தில் தொடர்புகொண்டு மேலதிக விபரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இல :

416 - 497 - 2867 (கனடா)

இலங்கை நேரப்படி அதிகாலை 5 மணியில் இருந்து காலை 9 மணிக்குள் தொடர்புகொள்ளவும்.

### பதவி வெற்றிடம்

பிரபலமான காப்புறுதி கம்பனியொன்றிற்கு வெளிக்கள உத்தியோகத்தர்கள் தேவை

தகைமை : க.பொ.த (சா/த), கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தி

- ★ ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- ★ வேறு நிறுவனங்களில் வேலை செய்வோர் பகுதி நேரமாக இணைந்து கொள்ளலாம்.

வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு சுயதொழிலுக்கான பணம், இலவச காப்புறுதி, ஊக்குவிப்புத்தொகை என்பன உண்டு.

விண்ணப்ப முடிவுத் திகதி : 14.03.2004

தொடர்பு:
விளம்பர இல. 26,
மே/பா நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

### நிரஞ்சனாஸ் சங்கானை

விஜய், சூர்யா, தேவயாணி நடித்த

ப்ரண்ட்ஸ்

காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)

BLOOD SPORT - 2

(சி-2262)

### ராஜா யாழ்ப்பாணம்.



தனுஷ், அபர்ணா, கருணாஸ் நடித்த

புதுக்கோட்டையிலிருந்து சரவணன்

10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

8 ஆம் திகதி முதல் கோவில்

(சி-2263)

### ஆசிரியர்கள் தேவை

தரம்-01 தொடக்கம் A/L வரையான வகுப்புகளுக்கு சகல பாடங்களிற்கும் ஆசியர்கள் தேவை

தொடர்புகளுக்கு:
உடுவில் சைன் ரீயூசன் சென்ரர்


## நெஞ்சில் நிறைந்து நிலைத்த....

ஆனால், அவரோ உயர்ந்த பணபு கொண்டவர். ஒரு எழுத்தாளனையோ, பத்திரிகையையோ அவமானப்படுத்தக் கூடாது என நினைப்பவர். அவர் அப்படிக் கூறியது எனக்கு மிகவும் தெம்பாக இருந்தது. அவரது உயர்ந்த பண்பைக் கண்டுகொள்ளக்கூடியதாகவும், எனது எழுத்துக்களின் தரத்தை அவர் மதிப்பிட்டிருந்த விதத்தையும் எண்ணிப்பார்க்கவைத்தது.

நல்ல எழுத்தாளன் யார் என்பதற்கு அவர் அடிக்கடி சொல்லிக் கொள்வது - 'சொல்லும் செயலும் ஒன்றாக இருப்பவனே நல்ல எழுத்தாளன்' என்பது.

என்னடம் அவர் அடிக்கடி கூறிய அறிவுரை - எழுத்தாளர்கள் யாவருக்கும் உரிய அறிவுரை என்றே சொல்லத்தக்கது.

அகளங்கன், தனது தாயும், மனைவியும், மகளும் ஒன்றாக இருந்து வாசிக்கக் கூடிய இலக்கியம் படைப்பவன்தான் நல்ல எழுத்தாளன். நீரும் அப்படியே எழுதும் என்பார்.

இன்று முப்பது நூல்கள்வரை நான் வெளியிட்டுவிட்டேன். எனது நூல்கள் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் யாவற்றையும் அவர் கூறியதுபோல எனது மகளும் மனைவியும் அம்மாவும் ஒன்றாக இருந்து வாசிக்கக் கூடியதாகவே எழுதியுள்ளேன் என்பது எனக்கு மனநிறைவைத் தருகின்றது. இனியும் [illegible]படியே எழுதுவேன்.

ஐயாவைப் பற்றிய நினைவுகள் நினைக்க நினைக்க திரௌபதியின் துகில்போல நீண்டு பெருகுபவை. என்னோடு சம்பந்தப்பட்ட நினைவுகள் சிலவற்றையே இங்கே பகிர்ந்துள்ளேன்.

ஒரு அறிஞரோடு, சிந்தனைவாதியோடு, மாபெரும் கலைஞரோடு, மாமனிதரோடு சமகாலத்தில் வாழ்ந்து உரையாடி, உறவாடும் பேறு கிடைத்தது, நான் செய்த புண்ணியமே.

நான் எழுத்தாளனாக உலாவுவதற்குக் காரணம் சிரித்திரன் ஐயாவேதான். எனது நூல்கள் யாவற்றிலும் நான் அவரை நினைவு கூரத் தவறுவதில்லை.

சிரித்திரன் சுந்தர் ஒரு காவியம். பாதத்தைத் தரையில் பதித்த தேவன். அவர் புகழ் என்றும் வாழும்.


### 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது முன்பள்ளி ஆசிரியைகளான திருமதி.விக்கினேஸ்வரி வரதராஜனின அன்புத் துணைவரும், செல்வி. மீரா வரதராஜனின் பாசமிகு தந்தையும் 'பிரபல ஆயள்வேத வைத்தியருமான'

திரு.கிருஷ்ணசாமி வரதராஜன்

அவர்களது பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

முன்பள்ளி ஆசிரியர் சங்கம்,
வலி.மேற்கு.

(சி/2292)

# முரண்பாடான கொள்கைகளுடன் ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி கூட்டணி

## ராஜித சேனரத்ன கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாணங்களில் நிலவும் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக ஜே.வி.பி தெளிவில்லாத கொள்கையை கொண்டுள்ளது.

அத்துடன், ஐக்கிய மககள் சுதந்திர முன்னணியிலுள்ள ஜே.வி.பி சுதந்திரக்கட்சிகளிடையே இது தொடர்பான முரண்பாடான கொள்கைகள் உள்ளன. இதன்மூலம் இவர்கள் ஒவ்வொருவரையும் குழப்பத்திற்குள்ளாக்குகின்றனர்.

இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணியின் முன்னாள் காணியமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்றுமுன்தினம் கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

இவர்களின் இந்த நடவடிக்கையால் மக்கள் குழம்பியுள்ளார்கள். நாங்கள் குழம்பியுள்ளோம். விடுதலைப் புலிகளும் இது தொடர்பாக குழம்பியிருப்பார்கள் என நான் நினைக்கின்றேன்.

அத்துடன், சமாதானப் பேச்சுவார்த்தையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அணுகுவது தொடர்பில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களும் கட்டாயம் குழம்பியிருப்பர்.

அத்துடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த லக்ஷ்மன் கதிர்காமர் - சமாதானப் பேச்சுவார்த்தை மேசையில் விடுதலைப் புலிகள்தான் ஏகபிரதிநிதிகள் எனக் கூறும் அதே வேளை, தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான் என்பதை அங்கீகரிக்கப் போவதில்லை எனவும் கூறுகின்றார்.

ஜே.வி.பியைச் சேர்ந்த விமல் வீரவன்ச - முன்நிபந்தனைகளுடன் புலிகளுடன் பேசத்தயாரெனவும், ஆனால் அவர்களை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்கமுடியாதெனவும் கூறுகின்றார்.

ஜே.வி.பி -சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையைத் தொடர்வதற்கு, நிபந்தனைகள் விதிக்க வேண்டுமா எனக் குழம்பிப் போயுள்ளனர். ஆனால், இந்த முன்னணியின் கொள்கை வகுப்பாளராக தன்னை இனங்காட்டிக்கொள்ளும் சோமவன்ச, பேச்சைத் தொடர்வதற்கு முன் நிபந்தனை விதிக்கப்படும் எனக் கூறுகின்றார். இந்த நிலையில் ஜனாதிபதி சந்திரிகா ஏன் மௌனமாக உள்ளார். நாட்டுக்கு தீங்கு விளைவிக்கும் ஜே.வி.பியினருடன் ஏன் கூட்டுசசேர்ந்தோம் எனக் கவலைப் படுகின்றாரா எனவும் அவர் மேலும் கேள்வியெழுபபினார்.

## 24, 25 ஆம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு

நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு - எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்கா அறிவித்தார்.

இந்த வாக்களிப்பிற்குரிய வாக்குச்சீட்டுக்கள் -அந்தந்த மாவட்டங்களிலுள்ள தபால்மூல வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தபால்மூல வாக்காளர் இடாப்புகள் உறுதிப்படுத்தும் நிகழ்வுகள் இம்மாதம் 12 ஆம் திகதி மாவட்ட தேர்தல் ஆணையாளர் அலுவலகங்களில் இடம்பெறவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றன.

## அரச ஊடக வாகனங்கள் தேர்தல் பிரசாரத்துக்கு!

### இம்தியாஸ் குற்றச்சாட்டு



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரச வாகனங்களைத் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதாக முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் குற்றம் சாட்டினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது - லேக்ஹவுஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான ஜி.எக்ஸ் 9030 இலக்கமுடைய வாகனம் - ஐக்கிய முன்னணியின் தேர்தல் வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

இந்த நிறுவனத்தின் நிர்வாகப் பணிகளுக்குச் சொந்தமான ஜிஏ 2020 கார் - மாத்தறை மாவட்டத்தில் தேர்தல் பிரசாரப் பணிகளுக்காக, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன், ஜிபி 4097 இலக்கமுடைய ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான வாகனம் - பொதுஜன ஐக்கிய முன்னணியின முன்னாள் பிரதி அமைச்சர் ஒருவரால் குருநாகல் மாவட்டத்தில் பிரசாரப பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 56-550 இலக்கமுடைய வாகனம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் தேர்தல் நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பஜிரோ வாகனத்துடன் இரு புலிகள் கைது!

ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாக வன்னிப்பகுதிக்குக் கொண்டு செல்லப்பட இருந்த ஆடம்பர பஜிரோ இன்ரகூலர் வாகனத்தையும், அதனைக் கொண்டு சென்ற இரு விடுதலைப் புலிகளையும் கைது செய்துள்ளதாகப் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

இந்தக் கைது சம்பவம் நேற்று முன்தினம் ஓமந்தை இராணுவச் சோதனைச்சாவடியில் காலை 8.00 மணியளவில் இடம்பெற்றது.

ஓமந்தை சோதனைச்சாவடி ஊடாக இந்த பஜிரோவுடன் சென்ற இரண்டு விடுதலைப் புலிகளிடமும் வாகனம் தொடர்பான ஆவணங்களைப் படையினர் கோரியபோதும் அவர்கள் அவற்றைக் கொடுக்க முடியாமலிருந்தனர்.

இதன் பின் அந்த வாகனம் ஓமந்தையிலுள்ள பொலிஸாரின் விசாரணைப்பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதோடு, இரு விடுதலைப் புலிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வேட்பாளர் மரணம்

(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்தில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் மாரடைப்பினால் மரணமானார்.

ஐக்கிய இலங்கை ஜனநாயக முன்னணியின் சார்பில் போட்டியிட்ட எல்.ரங்கநாதன் என்பவரே மரணமானவராவார்.

70 வயதான ரங்கநாதன் - இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் முன்னாள் உப தலைவர் என்பதுடன், அம்பே கமுவ பிரதேசசபையின் முன்னாள் தலைவராகவும் இருந்தவர் என் பது குறிப்பிடத்தக்கது.

## வேட்பாளர்களுக்கு இராணுவ பாதுகாப்பு

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளருக்கும் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், அவர்களுக்கு இராணுவ பாதுகாப்பு வழங்கப்படும் என இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார்.

வேட்பாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டிருக்கும் பொலிஸ் பாதுகாப்புக்கு மேலதிகமாகவே இராணுவப் பாதுகாப்பு வழங்கப்படவிருக்கிறது.

வேட்பாளர்களுக்கு இராணுவ பாதுகாப்பு வழங்கப்படுவதற்கான உத்தரவை - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் இராணுவத் தளபதிக்கு வழங்கியிருப்பதாகவும் கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார்.

## தேர்தல் கண்காணிப்பு பணி: ஒப்பந்தம் கைச்சாத்தானது!

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலை கண்காணிப்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் தேர்தல் ஆணையாளருக்கும் இடையிலான ஒப்பந்தம் ஒன்று நேற்றுமுன்தினம் கைச்சாத்தானது.

பொதுத்தேர்தல் - ஜனநாயக ரீதியில் வன்முறைகளின்றி நடைபெறுவதை அவதானிப்பதற்காக விடுக்கப்பட்ட கோரிக்கையையடுத்து, கண்காணிப்பாளர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடமையாற்றவுள்ளனர்.

இதற்காக சுமார் 40 பேர் அடங்கிய சர்வதேச கண்காணிப்பாளர்கள் இலங்கை வரவுள்ளனர்.

இவர்கள் - தேர்தலில் கடமையாற்றுவதற்கான ஒப்பந்தத்தில் நேற்று தேர்தல் ஆணையாளர் தயாணந்த திஸநாயக்க, ஐரோப்பிய ஒன்றியத்தின் நோர்வேக்கான தூதுவர் ஒல்டர் வில்சன் ஆகிய இருவரும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்களின் தலைவராக குஷ்தகார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, பங்களாதேஷின் 25 பேரும், நேபாளத்திலிருந்து ஒருவரும், பாகிஸ்தான் மற்றும் பொதுநலவாய நாடுகளிலிருந்து 13 பேர் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (01)

### ஈ.பி.டி.பி. உறுப்பினர் கொலையைக் கண்டித்து

## கண்காணிப்பு அலுவலகம் முன் மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகத்தின் முன் நேற்றுமுன்தினம் ஈ.பி.டி.பியினர் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தி இருந்தனர்.

வாழைச்சேனைப்பகுதியில் கடந்த முதலாம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட ஈ.பி.டி.பி உறுப்பினரான பொன்னையா யோகேந்திரனின் பூதவுடலை ஊர்வலமாக எடுத்துச் சென்று, மட்டக்களப்பு மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்பு குழு அலுவலகத்தின் முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டத்தினை நடத்தினர்.

சுமார் மூன்று மணிநேரம் வரை இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் முடிவில- அரசியல் படுகொலைகளற்ற, அச்சுறுத்தலற்ற தேர்தல் இடம்பெற வேண்டும் என அங்கு கூடியிருந்த ஈ.பி.டி.பியினர் கண்காணிப்பாளர்களிடம் கோரியிருந்தனர்.

இதனையடுத்து இந்தக் கொலை தொடர்பான நீதி விசாரணை நடத்துவதாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் உறுதியளித்ததைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் விலகிச்சென்றுள்ளனர் எனத் தெரியவருகிறது. (01)

## யுத்த சூனியப் பிரதேசத்தில் தேர்தல் நடத்தமுடியுமாம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் யுத்த சூனியப் பிரதேசத்தில் தேர்தல் நடத்த முடியும் என அப்பகுதியில் வெடிபொருள் அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள பொது அமைப்பு அறிவித்துள்ளது.

யுத்த சூனியப்பிரதேசத்தில் வெடிபொருள் அபாயம் இருப்பதால் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பது கடினமெனவும் தேர்தல் ஆணையகம் கருதியது.

இது குறித்து வெடிபொருள் அகற்றும் பிரிவினரிடம் சரியான தகவலை வழங்குமாறு மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் தெரிவு அத்தாட்சி அலுவலர் ஆர்.மௌனகுருசாமி கோரியிருந்தார்.

இதனையடுத்து அப்பகுதியில் வெடிபொருள் அகற்றும் பணயில் ஈடுபட்டு வரும் 'மக்' நிறுவனம் நேற்றுமுன் தினம் இத்தகவலை தெரிவித்தது.


இதனால் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் உதவியுடன் யுத்த சூனியப்பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையங்களை அமைக்க முடியுமென மட்டக்களப்பு தேர்தல் அத்தாட்சி அலுவலகம் தெரிவித்துள்ளது.




# வீரர்களின் போர் இன்று ஆரம்பம்!

**வலிகாமத்தின் பிரபல பாடசாலைகளான மகாஜனாக் கல்லூரிக்கும் - ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையில் வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் மாபெரும் கிரிக்கெட்போட்டி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.**

## சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி



சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் அணிவீரர்கள், கல்லூரி அதிபர் ஆசிரியர்களுடன்.

***இடமிருந்து வலமாக இருப்பவர்கள் –***

எம்.நடராஜா (விளையாட்டு முதல்வர்), ரி.இராஜரட்ணம் (பொறுப்பாசிரியர்), வி.நந்தீஸ்வரன் (பொறுப்பாசிரியர்), ஆறு திருமுருகன் (உப அதிபர்), பி.றஜீபன் (அணித் தலைவர் - 4 ஆவது வருடமாக விளையாடுகின்றார். வலதுகைத் துடுப்பாட்ட வீரர்), கே.சிவாஜி (கல்லூரி அதிபர்), எஸ்.யசிதரன் (4 ஆவது வருடமாக விளையாடுகின்றார். வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், வலதுகைச் சுழற்பந்து வீச்சாளரும்), ஆர்.ஜோர்ஜ் (பிரதி அதிபர்), எஸ். மகேந்திரன் ( உப. அதிபர்), எஸ். ஜெகதீஸ்வரன் (பொறுப்பாசிரியர்), ஜி.சசிவர்ணன் (பயிற்றுநர்).


***இரண்டாவது வரிசையில் இடமிருந்து வலமாக நிற்பவர்கள் –***

ஏ.பிரதீப் (2 ஆவது வருடமாக விளையாடுகின்றார், வலதுகைத் துடுப்பாட்ட வீரர்), எஸ்.கௌதீபன் (வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், வேகப்பந்து வீச்சாளரும்), ஏ.துஸ்யந்தன் (5 ஆவது வருடமாக விளையாடுகின்றார், வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், மிதவேகப்பந்து வீச்சாளரும்), எச்.கிருஸ்ணச்சித்திரா (வலதுகைத் துடுப்பாட்ட வீரரும் வேகப்பந்து வீச்சாளரும் - 5 ஆவது வருடமாக விளையாடுகின்றார்), வி. மங்களதாஸ் (3 ஆவது வருடமாக விளையாடுகின்றார், வலதுகைத் துடுப்பாட்ட வீரர்), பி.கார்த்தீபன் (2 ஆவது வருடமாக விளையாடுகின்றார். வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், பந்து வீச்சாளரும்), ஆர். ராகுலன் (சிறந்த களத் தடுப்பாளர்).

***மூன்றாம் வரிசையில் இடமிருந்து வலமாக நிற்பவர்கள் –***

கே.நிறோஜன் (வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், சிறந்த களத்தடுப்பாளரும்), வி.பாலகிருஸ்ணன் (இடதுகைப் பந்துவீச்சாளரும், களத் தடுப்பாளரும்), கே.ஜசிதரன் (4 ஆவது வருடமாக விளையாடுகின்றார், வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், சுழற்பந்து வீச்சாளரும்), கே. கபிலன் (2 ,ஆவது வருடமாக விளையாடுகின்றார், வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், பந்து வீச்சாளரும்), எஸ்.சுஜீவன் (3 ஆவது வருடமாக விளையாடுகின்றார், வலதுகை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்), ஏ.இந்திரஜித் (வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், சிறந்த களத் தடுப்பாளரும்), எஸ். சுமன் (3 ஆவது வருடமாக விளையாடுகின்றார், வலதுகைத் துடுப்பாட்ட வீரரும் பந்து வீச்சாளரும்)

## தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி




தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் வீரர்கள் - கல்லூரி அதிபர் ஆசிரியர்களுடன்.

***இடமிருந்து வலமாக இருப்பவர்கள் –***

நா.புனித தயாபரன் (அணியின் பொறுப்பாசிரியர்) நா.சிறிதரன் (பயிற்றுநர்), ப.ரவிசங்கர் (அணித்தலைவர்- 4 ஆவது வருடமாக விளையாடுகிறார், வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், ஆரம்ப வேகப்பந்து வீச்சாளரும்), பொ.சுந்தரலிங்கம் (கல்லூரி அதிபர்), பா.அச்சுதன் (உதவி அணித் தலைவர் - 4 ஆவது வருடமாக விளையாடுகிறார், வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், ஆரம்ப வேகப்பந்து வீச்சாளரும்), க.காராளசிங்கம் (விளையாட்டு முதல்வர்).

***இரண்டாவது வரிசையில் இட மிருந்து வலமாக நிற்பவர்கள் –***

இ.ரவிசாந் (4 ஆவது வருடமாக விளையாடுகிறார், வலதுகைத் துடுப்பாட்ட வீரரும் வேகப்பந்து வீச்சாளரும்), ஆ.பிரசாத் (முதலாவது வருடத்தில் விளையாடுகிறார், வலதுகைத் துடுப்பாட்ட வீரனும், மித வேகப்பந்து வீச்சாளரும்), தெ.றஜீவ் (4 ஆவது வருடமாக விளையாடுகிறார், வலதுகைச் சுழல்பந்து வீச்சாளரும், வலதுகை துடுப்பாட்ட வீரரும்), நா.சதீஸ் (ஒரு வருடமாக விளையாடுகிறார், வலதுகை துடுப்பாட்ட வீரரும், மித வேகப்பந்து வீச்சாளரும்), ப.துஷியந்தன் (2 ஆவது வருடமாக விளையாடுகிறார், வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், மித வேகப்பந்து வீச்சாளரும்), ச.மயூரன் (ஒரு வருடமாக விளையாடுகிறார். வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், மித வேகப்பந்து வீச்சாளரும்), ச.தனஞ்சயன் (ஒருவருடமாக விளையாடுகிறார், வலதுகை துடுப்பாட்ட வீரரும் மித வேகப்பந்து வீச்சாளரும்).

***மூன்றாம் வரிசையில் இடமிருந்து வலமாக நிற்பவர்கள் –***

ப.ஜீவசங்கர் (2 ஆவது வருடமாக விளையாடுகிறார். வலதுகை துடுப்பாட்ட வீரரும், மித வேகப்பந்து வீச்சாளரும்), ச.கைலாசபதி (ஒரு வருடமாக விளையாடுகிறார், வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், மித வேகப்பந்து வீச்சாளரும்), ஜெ. ஜசிந்தன் (ஒரு வருடமாக விளையாடுகின்றார் - வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், மிதவேகப்பந்து வீச்சாளரும்), இ.தர்சன் (ஒரு வருடமாக விளையாடுகிறார், வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், மித வேகப்பந்து வீச்சாளரும்), பிரகலாதன் (ஒரு வருடமாக விளையாடுகிறார், வலது கைத் துடுப்பாட்ட வீரரும் மித வேகப்பந்து வீச்சாளரும்), வை.புவனீசன் (ஒரு வருடமாக விளையாடுகிறார், வலதுகைத் துடுப்பாட்ட வீரரும் விக்கெட் காப்பாளரும்), ஜெ.ஜெயப்பிரியந்தன் (2 ஆவது வருடமாக விளையாடுகின்றார். வலதுகைத் துடுப்பாட்ட வீரரும் விக்கெட் காப்பாளரும்) (72)

# டெண்டுல்கரை வீழ்த்துவதே பாகிஸ்தான் அணியின் இலக்கு

## இன்ஸமாம் உல்ஹக் தெரிவிப்பு

இந்திய கிரிக்கெட் அணி 15 ஆண்டு இடைவெளிக்குபிறகு பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்து 3 டெஸ்ட் போட்டி மற்றும் 5 ஒருநாள் போட்டியில் விளையாடவுள்ளது. வருகிற 10 ஆம் திகதி இந்திய அணி பாகிஸ்தான் புறப்பட்டுச் செல்கிறது.

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான ஒருநாள் தொடர் , எதிர்வரும் 13 ஆம் திகதி கராச்சியில் தொடங்குகிறது. இதற்காக பாகிஸ்தான் வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த தொடருக்கு இன்ஸமாம் கப்டனாக இருப்பார். இந்த ஆண்டு முடியும்வரை அவர் கப்டனாக இருப்பார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது. இந்தியாவுக்கு எதிரான ஆட்டம் குறித்து இன்ஸமாம் நிருபர்களிடம் கூறியதாவது -

கடந்த 2 ஆண்டுகளில் இந்திய அணி மிகுந்த முன்னேற்றம் அடைந்துள்ளது. டெண்டுல்கர், டிராவிட், கங்கூலி, லக்ஷ்மன் போன்ற 4 தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். இதனால், இந்த தொடர் சவாலாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

தற்போதுள்ள இந்திய வீரர்களில் டெண்டுல்கர் மட்டுமே பாகிஸ்தானில் டெஸ்டில் விளையாடி இருக்கிறார். அவர் உலகின் தலைசிறந்த துடுப்பாட்டவீரர் ஆவார். டெண்டுல்கரை வீழ்த்துவதே எங்கள் லட்சியம். அவரை அவுட் செய்ய புதிய திட்டம் வைத்து இருக்கிறோம். அவரது துடுப்பாட்ட நுணுக்கங்களை வீடியோவில் பார்த்து வருகிறோம்.

எங்கள் அணியின் பலமே பந்து வீச்சுத் தான். சொயிப் அக்தர் முக்கிய பங்காகவுள்ளார். நியூஸிலாந்து தொடரில் அவரது பந்து வீச்சு சிறப்பாக இருந்தது. முகமது சமியும் அவருக்கு இணையானவர்.

இந்திய அணியின் பந்துவீச்சு அனுபவமற்றது என்றுகூற இயலாது. பாகிஸ்தானில் மட்டுமே அவர்கள் பந்துவீசவில்லை. சொயிப் அக்தருக்கு இணையான பந்து வீச்சாளர் சகீர் கான் ஆவார். அசிஷ் நெஹ்ரா, இர்பான்பதான் போன்ற சிறந்த பந்துவீச்சாளர்களும் அந்த அணியில் உள்ளனர்.

யூசுப் யுகானா, இம்ரான் பர்கத், தவ்பீக் உமர் போன்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்களும் எங்கள் அணியில் உள்ளனர். பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் மியான்டட் முக்கிய பங்காக இருக்கிறார். எதிர் அணியினரின் பலவீனத்தைப் புரிந்துகொள்வதில் அவர் வல்லவர். மற்றப் பயிற்சியார்களுடன் ஒப்பிடுகையில் மியான்டட் சிறந்த பயிற்சியாளர் ஆவார்.

ஒருநாள் போட்டியில் இந்திய அணி சிறந்ததாக இருக்கிறது. ஆனால், டெஸ்டில் பாகிஸ்தான் அணியே சிறந்தது.

இந்தியாவுடன் மோதும் போட்டியில் எப்போதுமே வெற்றிபெற வேண்டும் என்று பாகிஸ்தான் ரசிகர்கள் நினைக்கிறார்கள். ரசிகர்கள் எங்களுக்கு நெருக்கடி கொடுக்கக்கூடாது. அப்படிக் கொடுத்தால் நாங்கள் தோற்றுவிடுவோம்.

பங்களாதேஷ் அணியிடம் தோற்றால் அடுத்தநாள் வீட்டில் தங்கலாம். ஆனால் இந்தியாவுக்கு எதிராக அப்படி இல்லை. பெங்களூரில் நடந்த உலக கோப்பை கால் இறுதியில் இந்தியாவிடம் தோற்றோம். அப்போது எங்களுக்கு கொலை மிரட்டல் வந்தது.

இருநாட்டு ரசிகர்களையும் நான் கேட்டுக் கொள்வது - பொறுமையாக இருங்கள் என்று தான். வெற்றி, தோல்வி என்பது விளையாட்டின் ஒரு பகுதியாகும். இருவீரர்களுமே வெற்றிக்காகப் போராடுகிறார்கள். எப்படியும் ஒரு அணி தோற்கத்தானே செய்யும். இதை ரசிகர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு இன்ஸமாம் கூறினார்.

## உதைபந்தாட்ட வீரர்களுக்கு முக்கிய கூட்டம்

யாழ்.உதைபந்தாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழக வீரர்களுக்கான முக்கியமான சந்திப்பொன்று எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மாலை மூன்று மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முக்கியமான சில விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட வேண்டியுள்ளதால், உதைப்பந்தாட்ட சங்கத்தில் பதிவுசெய்த விளையாட்டுக்கழக வீரர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# விளையாட்டு

## இல்ல மெய்வன்மைப் போட்டி

(சுதுமலை)

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் நா.வன்னியசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி மைதானத்தில் இடம்பெற இருக்கும் இந்த நிகழ்விற்கு, சிறப்பு விருந்தினராக யாழ்.வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஜே.ரவீந்திரன், சிறப்பு விருந்தினராக நாவலர் வித்தியாலய அதிபரும் பழைய மாணவருமான என்.சிவராஜா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (91)

☆ ☆ ☆

யா/வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப 1.30 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் திருமதி இ.நாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக இளைப்பாறிய அதிபர் கதிர் செல்வநாயகம் கலந்துகொள்ளவுள்ளார்.

☆ ☆ ☆

யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 2.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் அ.யோகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயமூர்த்தி பிரதம விருந்தினராகவும். சர்வதேச மாணவர் பேரவையின் முன்னாள் தலைவர் செ.கஜேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

☆ ☆ ☆

யா/வட்டுக்கோட்டை அ.மி.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 2.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில், பாடசாலை அதிபர் கா.சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு வலிகாமம் வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராஜா பிரதம விருந்தினராகவும், கிராம அலுவலர் க.விஜயவேல், நா.ஜெயரஞ்சிதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

☆ ☆ ☆

(கோண்டாவில்)

யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பி.ப 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு - ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் நா.இராமநாதர் பிரதம விருந்தினராகவும், யாழ்.கல்வி வலய முன்னாள் ஆசிரிய ஆலோசகர் வே.கைலைநாதன், பழைய மாணவர் இ.ரகுபரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

☆ ☆ ☆

(உடுவில்)

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 11 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு அதிபர் க.செல்வகுமாரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலி. தெற்கு பிரதேச செயலர் சி.திருவாகரன் பிரதம விருந்தினராகவும், கோட்டக் கல்வி அதிகாரி செ.குபேரநாதன் சிறப்பு விருநதினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (101)

# ஆரோக்கிய வாழ்வுக்கு உடற்பயிற்சி அவசியம்

## நீதிவான் சரோஜினி இளங்கோவன்

சுவர் இருந்தால் சித்திரம் வரையலாம். அதேபோல, நல்ல உடல் இருந்தால்தான் ஆரோக்கியமாக வாழலாம். அந்த ஆராக்கியமான உடலைப்பெற விளையாட்டு அவசியமாகும்.

இன்று எல்லோரிடமும், ஏதாவது ஒரு வருத்தம் உள்ளது. மக்களின் அவசரப்போக்கும், உடற்பயிற்சியின்மையுமே வருத்தங்கள்வர ஏதுவாகிறது. இவற்றைத் தடுப்பதற்கு - விளையாட்டுக்கள் மிகவும் அவசியமாகும்.


வலி.தெற்கு பிரதேசசபையினரால் - கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற - 30 ஆவது தேசிய விளையாட்டு விழாவில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மல்லாகம் மாவட்ட நீதிவான் சரோஜினிதேவி இளங்கோவன் இவ்வாறு தெரிவித்தார்.

வலி.தெற்கு பிரதேச செயலர் சி.திருவாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் -


ஒரு குறிப்பிட்ட காலம்வரையும்தான் இளமைக்காலம். இந்தக் காலத்தை வீணடிக்காது, விளையாட்டுத்துறையில் ஈடுபடுத்துவதன்மூலம் பல சான்றிதழ்களைப் பெற்று, வேலை வாய்ப்புக்களைத் தேடிக்கொள்ள இலகுவாகவிருக்கும். எந்த தொழிலாயினும், எப்பொழுதும் பயிற்சி பெற்றுக்கொண்டிருப்பின், அதை தொடர்வது இலகுவாயிருக்கும். சர்வதேசரீதியிலும் எமது பிரதேசம் பெயர்பெற்று திகழ - தொடர் பயிற்சிகளை மேற்கொள்வது அவசியம் என்றார்.

யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி றொகான் இராஜசிங்கம் குறிப்பிடுகையில் -

1995 ஆம் ஆண்டிற்கு முன்னர் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய வீரவீராங்கனைகளைவிட, தற்பொழுது குறைந்த எண்ணிக்கையானவர்களே பங்குபற்றுகின்றனர். இப்பொழுது விளையாட்டுக் கழகங்களால் அனுப்பப்படும் ஆட்சேபனைக் கடிதங்களும் மிக அதிகம். இதிலிருந்து அவர்களின் உற்சாகம் புலப்படுகிறது எனத் தெரிவித்தார். (101)




யாழ்.கடற்தொழில், கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் - பயிற்சியில் ஈடுபடும் மாணவர்களையும், போதனாசிரியர்களையும் படத்தில் காணலாம். (206)



காரைநகர் சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட - தீவக வலயத் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேஸ்வரன் வெற்றியீட்டிய மாணவிக்கு வெற்றிக்கேடயம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (52)

# சின்னஞ்சிறு செய்திகள்

### 'அம்மா நலமா' திரைப்பட வெளியீட்டுவிழா

நிதர்சனம் நிறுவனத்தின் திரைப்பட உருவாக்கப் பிரிவினரால் தயாரித்து வெளியிடப்படும் ந.கேசவராஜனின் - 'அம்மா! நலமா?' திரைப்பட வெளியீட்டு விழா - நாளை சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

### சலன சித்திரம் நிர்வாக கூட்டம்

சலன சித்திரம் - யாழ்ப்பாணம் அமைப்பின் மாவட்ட நிர்வாகக் குழுக் கூட்டம் - நாளை காலை 10 மணிக்கு - கொடிகாமம் வீதி, கரவெட்டியிலுள்ள சம்மேளனக் கிளைச் செயலகத்தில், மாவட்டத் தலைவர் வி.எஸ்.சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சர்வதேச சினிமாத்தினம் அனுஷ்டிப்பது தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விசேடமாக ஆராயப்படவுள்ளதால்,- இது பற்றிக் கருத்துத் தெரிவிக்க விரும்பும் நிகழ்வுகளை அறிக்கை செய்யவிரும்பும் அங்கத்தவர்களும், கலந்துகொள்ள் முடியுமென்று' பொதுச்செயலாளர் தெரிவித்தார்.

### ஆன்மீக சொற்பொழிவு

இந்து சமயவிவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். மாவட்ட பிராந்திய அலுவலகம் - நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப்பாடசாலை அதரவுடன் நடத்தும் 68 ஆவது ஆன்மீக நிகழ்சிச்தொடர் நிகழ்வு- இன்று பிற்பகல் 5 மணிக்கு நாவல் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அமைச்சின் உதவிப்பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் தலைமை இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

### சர்வதேச மகளிர் தினம்

மகளிர் அபிவிருத்தி நிலையமும், கிராமிய உழைப்பாளர் சங்கமும் இணைந்து மகளிர் தின விழாவை - நாளை மறுதினம் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடத்தவுள்ளன.

மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் - மல்லாகம் மாவட்ட நீதிவான் சரோஜினி இளங்கோவன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு, மனைப்பொருளியல் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குவார். அத்துடன், மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் வைபவமும் இடம்பெறவுள்ளது என மகளிர் அபிவிருத்திநிலையம் தெரிவிக்கின்றது. (தீ)

### தபால் மூல வாக்களிப்பு 11 ஆம் திகதி பயிற்சிவகுப்பு

எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் தபால்மூலம் வாக்களிப்பு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெறவுள்ளது.

தபால்மூல வாக்களிப்பு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள்- இந்த பயிற்சி வகுப்பில் தவறாது கலந்துகொண்டு, உரிய பயிற்சியைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (தீ)

### நீதிநூல் மனனப்போட்டி

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவ சமய அபிவிருத்திக்கழகம் வருடாந்தம் நடாத்திவரும், நீதிநூல் மனனப்போட்டி - நாளை சனிக்கிழமை காலை 9 மணிமுதல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த தரம் - 1, தரம் - 2 மாணவர்கள் சுமார் 950 பேர் தோற்றவுள்ளனர்.

### ஒரே இரவில் 4 இடங்களில் திருட்டு

(வண்ணை)

ஒரே இரவில் மூன்று கடைகளிலும், ஒரு வீட்டிலும் திருடப்பட்ட சம்பவம் நேற்றுமுன்தினம் இராசாவின் தோட்டப் பகுதியில் இடம்பெற்றது.

அந்தப் பகுதியில் அமைந்துள்ள - வேகா தொலைத்தொடர்பகம், விஜயன் தையலகம், சிகை அலங்கரிப்பு நிலையம் என்பன உடைக்கப்பட்டு, பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன. அத்தியடியில் வீட்டின் முன்புறம் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது. இவை தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(111)

### அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

தீவக கல்வி வலயத்தில் யாழ். வேலணை தெற்கு ஐயனார் பாடசாலையில் ஏற்பட்டுள்ள அதிபர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை தரத்தைச் சேர்ந்தவர்களும், ஆசிரியர் தரம் 2 1, 1 ஐ சேர்ந்தவர்களும் 15.03.2004 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை - தீவக வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

### தந்தை செல்வா அறக்காவலர் குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வா அறக்காவலர் குழுவினரின் நிர்வாகசபைக் கூட்டம் - தலைவர் வண.பிதா ஜெபநேசன் தலைமையில் இன்று காலை 10 மணிக்கு - மாட்டின் வீதியிலுள்ள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

### செயல்முறைப் போட்டி

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழகம் வருடாந்தம் நடாத்திவரும் செயல்முறைப் போட்டி - நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மத்தியபிரிவு, மேற்பிரிவு ஆகிய இரு பிரிவுகளாக நடத்தப்படும் செயல்முறைப் போட்டிகளில் - மாலை கட்டுதல், கோலம்போடுதல், தோரணம்பின்னுதல் ஆகிய போட்டிகளில் சுமார் 200 பேர்வரை தோற்றவுள்ளனர்.

### இந்தமாதம் முதல் நிலுவையுடன் ஓய்வூதியம்

தென்மராட்சி பிரதேச செயலகம்மூலம், ஓய்வூதியம் பெறுவோர்களுக்கு அரசினால் அறிவிக்கப்பட்ட 10 வீத அதிகரிப்பு இந்த மாதம்முதல் வழங்குவதற்குரிய சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாகவும், இந்த மாதம் 11 ஆம் திகதி ஓய்வூதியம் பெறும்போது, இரண்டுமாத நிலுவையுடன் சேர்த்து இந்த அதிகரிப்பை ஓய்வூதியர்கள் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் தென்மராட்சி பிரதேச செயலக ஓய்வூதியப் பகுதியினர் தெரிவித்தனர். (24)

### சேவைநலன் பாராட்டுவிழா

ஜே/315 கல்வயல் பிரிவு கிராம அலுவலராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற கிராம அலுவலர் சி.தில்லையம்பலத்திற்கு - கல்வயல் பகுதி பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து வேவைநலன் பாராட்டுவிழா ஒன்றை நடத்தின. கல்வயல் ஸ்ரீ சண்முகாணந்த வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - அவர் பொன்னாடை போர்த்தி, தங்க மோதிரம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன், கிராம அலுவலர்களான - க.இராசரத்தினம், க.வர்மதேவன், சிவஸ்ரீ.சி.சிதம்பரநாதக் குருக்கள் உட்பட பலர் வாழ்த்துரை மற்றும் ஆசியுரைகளை வழங்கினர். அதேவேளை, வெற்றிடமாயுள்ள கல்வயல் ஜே/315 பிரிவுக்கு - சாவகச்சேரி நகர கிராம அலுவலர் க.இராசரத்தினம் பதிற்கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிட்டதக்கது (24)

# யு.என்.எச்.சி.ஆர். உதவியுடன் அளவெட்டியில் வீடமைப்புத் திட்டம்

அளவெட்டிப் பிரதேசத்தில் யு.என.எச்.சி.ஆரின் அனுசரணையுடன் 56 லட்சம் ரூபா செலவில் அரைநிரந்தர வீடமைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீளக்குடியமரும் மக்களின் நலன கருதி யு.என்.எச்.சி.ஆர். அமைப்பால் இத்தகைய அரைநிரந்தர வீடமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

ஏற்கனவே, இந்தப் பகுதியில் பல வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளநிலையில், இந்த வீட்டுத்திட்ட வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை - கொழும்புத்துறை, பொம்மைவெளிப்பகுதிகளில் மீளக்குடியமரும் மக்களுக்கான வீடமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு 'சா' எனும் அமைப்பும் நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஒரு கட்டமாகத் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மூன்று வீடுகள் - யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் இந்த அமைப்பினால் கையளிக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் நிரந்தர இருப்பிடமற்ற 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# தெல்லிப்பளை சந்தியூடாக போக்குவரத்து அனுமதி

(உடுவில்)

பன்னாலை, இளவாலை, அளவெட்டி ஆகிய பிரதேசங்களிலிருந்து தெல்லிப்பளை, மல்லாகம் செல்லும் அரச ஊழியர்களின் நெடும்பயண போக்குவரத்தை இலகுபடுத்தும் நோக்கில் - தெல்லிப்பளைச் சந்தியூடாக செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

பாடசாலைகள், கோயில்கள், கூட்டுறவுச்சங்கம், பிரதேசசெயலகம், வைத்தியசாலை போன்றவற்றில் பணிபுரியும் ஊழியர்கள் - தினமும் காலையும், மாலையும் குறிப்பிட்ட நேரத்தில் தமது அனுமதி அட்டைகளை இராணுவத்தினரிடம் காண்பித்து, தெல்லிப்பளை சந்தியூடாக வரமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (101)

# ஆசிரியர் மத்திய நிலையங்கள் புனரமைக்க நடவழிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் இயங்கிவரும் ஆசிரிய மத்திய நிலையங்களைப் புனரமைக்க உலக வங்கி நிதி உதவி வழங்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கிலுள்ள ஆறு மாவட்டங்களைச் சேர்ந்த 10 ஆசிரிய மத்திய நிலையங்களைப் புனரமைப்பதற்கான நடவடிக்கையை- உலக வங்கி மேற்கொள்ளவுள்ளது. இதன்மூலம் வடக்கு - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்குப் பயிற்சிகளையும், தொழில் வாண்மைவிருத்தி மற்றும் கருத்தரங்குகளை நடத்துவதுடன், அவர்களின் நலன்களைக் கவனிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார், வவுனியா, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரிய மத்திய நிலையங்களுக்கே - புதிய கட்டடங்கள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளதுடன், தளபாடங்களும் வழங்கப்பவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.




# பெண்கள் வேலைக்குச் செல்வதால் குடும்பத்தில் உள்ளோர் பாதிக்கப்படுகின்றனர்

**இளங்கலைஞர் மன்றத்தில் இசை விழாவுக்கு வருகைதருகின்ற கலைஞர்களையும், பார்வையாளர்களையும் வரவேற்று சிறப்புற அமையக் காரணமாக இருக்கின்றவர்களில் ஒருவரான - பிறேமலோசன் ஜெயலஷ்சுமி என்பவரை இளங்கலைஞர் மன்றத்தில் சந்தித்தவேளை பரிமாறிய வார்த்தைகள்...**



பிறேமலோசனி ஜெயலஷ்சுமி

**1983** இல் ஆரம்பமான முதல் குண்டு வெடிப்பு - பதினான்கு இலஙகை இராணுவம் இறந்துவிட, துப்பாக்கி வேட்டுக்கள் முழங்க சுற்றிவளைத்த இராணுவம், அன்றிலிருந்து இன்றுவரை தொடரும் அவலம் என்றுவரை முடியும் என்று தெரியாமல் இருக்கின்ற நமது வாழ்க்கை, கூடுதலாகப் பெண்களின் வாழ்க்கையில் பெண்களால் மட்டுமேதான் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்க முடியும்.

எனது வயது 53, நான் பிறந்தது திருநெல்வேலியில். ஆனால், எனக்கு ஒரு சொந்தமான திண்ணை இல்லை. 1991 ஆம் ஆண்டிலிருந்து இளங்கலைஞர் மன்றத்திற்குச் சொந்தமான வீட்டில் வசித்து வருகின்றேன். எனது செல்வங்களாக ஒரு மகனும் ஒரு மகளும் இருக்கின்றார்கள்.

நான் கல்விகற்ற இளமைக்காலம் இனிமைக்காலம் ஆகும். இன்றைய காலம்போல் அல்ல அன்றைய காலப்பகுதி. கந்தர் மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கல்வி பயின்றேன். சங்கீதக்கலையில் எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. அதனால் சங்கீதம் கற்றேன். 12 வயதில் சங்கீதப் போட்டியில் யாழ். இந்து மகளிர் பாடசாலையில் முதல் பரிசு கிடைத்தது. அதுதான் இன்றுவரை மறக்கமுடியாத ஒரு நிகழ்வாக என் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது. ஆனால், தொடர்ந்தும் சங்கீதத்தைத் தொடரமுடியாமல் போனது. குடும்பத்தில் ஏற்பட்ட கஷ்டங்கள்தான். எந்தப் பெற்றோரும் தம் பிள்ளைகள் எதில் திறமையுள்ளவர்களாக இருக்கின்றார்களோ, அதைத் தெரிந்துகொண்டு பிள்ளைகளின் ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்யவேண்டும். ஆகவேதான் எனது பிள்ளைகளை நன்றாகப் படிக்க வைத்துக்கொண்டிருக்கிறேன். நான் பயின்ற சங்கீதம் இடையில் தடைப்பட்டதால், அதை இப்பொழுது எனது மகள்மூலம் வெளிக் கொணர்கின்றேன்.

இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறும் இசை நிகழ்வுகள் என்பவற்றை ஒழுங்காக நடத்துபவர்களில் நானும் ஒருவராக இருப்பதனால், அடிக்கடி ஒவ்வொருநாளும் ஏதோ ஒரு நிகழ்ச்சி நடைபெறும்போது, அதற்குத் தேவையான ஒழுங்கமைப்புகளைச் செய்யும் போது, மற்றவர்கள் கலைஞர்களாக வந்து இசையாகவும், நடனமாகவும் அரங்கமாகும் போது, எனக்குத் திருப்தி ஏற்படும். அன்றைய காலகட்டத்தில் என்னால் மீளமுடியாத கலை-இன்று எத்தனை பேர்கள்மத்தியில் விதைக்கப்பட்டுள்ளது என்பது பெருமையாக இருக்கின்றது.

எனது வீடு, சுற்றம், பிள்ளைகள் எல்லோரும் ஒரு கூட்டாக இருக்கவேண்டும். வீட்டினை அழகுபடுத்த நானே பிளாஸ்ரிக் பூக்கள் செய்து, நூலில் பூக்கூடை செய்து அதனுள் வைத்துத் தொங்கவிடுவேன். பிழிந்த தேங்காய்ப்பூ கொண்டு தரையினை தேய்த்து மினுமினுப்பாக வைப்பேன். அழகுபடுத்துவதில் எனக்கு விருப்பம் அதிகம். அழகான பூமரங்கள், குறோட்டன்கள் வளர்த்து, வீட்டின் வாசலில் வரிசைப்படுத்தி வைத்திருப்பதால், ஒவ்வொரு நாளும் தண்ணீா ஊற்றுவதாலும் எனக்கு ஆறுதல் கிடைக்கும். எந்தப் பிரச்சினையும் மனதிலிருந்து இவற்றால் மறந்து போகின்றது.

1995 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து சாவகச்சேரிக்குச் சென்று, தெரிந்தவர் வீட்டில் மூன்றுமாதம் இருந்துவிட்டு, பின் பருத்தித்துறைக் கடற்கரையில் தெரிந்த ஒருவரின் வீட்டில் இருந்தோம்.

அன்றைய காலப் பகுதியில் பகலில் வேலைகளுக்குச் செல்பவர்களும், வாகனங்களின் சத்தங்களும் களைகட்டிக் கொண்டிருக்கும். ஆனால், இரவானால் அமைதியாக இருக்கும் அந்தக் கடற்கரைப் பிரதேசங்களில் அலை மட்டும் அமைதியாக வந்து, கரையில் அடித்துவிட்டுச் திரும்பிச்செல்லும். மறுபடியும் வந்து திரும்பும். இந்த நேரத்தில் காதில் இனிமையாக இருக்கும். ஆனாலும் இயற்கையை ரசிக்கமுடியாமல், தூக்கத்திற்கும் பிடிககாமல் இருந்த என்னைத் தூங்கவைதது விடும்.

இடப்பெயர்வில் பல கஷ்டங்கள் பட்டதினால் நல்ல பாடங்களைக் கற்றுத்தந்திருக்கிறது. இடப்பெயர்வுதான் வாழ்வில் நிலையான உறுதியை ஏற்படுத்தியிருக்கின்றது. எந்தக்கஷ்டம் வந்தாலும் அதனை சமாளிக்கும் திறமை இதனூடே பெறக்கூடியதாக இருந்தது. இனிமேல் வாழ்க்கையில் எந்தப் பிரச்சினை வந்தாலும், யுத்தம் வந்தாலும் தாங்குவோம் என்ற உறுதியினை தந்திருக்கின்றது இந்த இடப்பெயர்வு. ஒரு பக்கம் அழிவுகளூடே நன்மைகளும் நீடிக்கின்றது. பெண்கள் மேலும் படிப்பது நல்லதுதான். ஆனால், உத்தியோகம் பார்ப்பதால்தான் ஒருவருக்கு சமூகத்தில் முன்னேற்றமும், ஒரு சிலருக்கு தீமையும் அமைந்து விடுகின்றது.

அதாவது ஆண்களை மட்டுமே குறைகூற முடியாது. பெண்களும் இதற்குக் காரணமாக இருக்கின்றார்கள். புரிந்துணர்வு கண்டிப்பாக இருக்கவேண்டும். எதையும் அணுகும் முறை நலலதாகவும், அதனை செயறபடுத்தவும் உதவவேண்டும்

பாடசாலைக்குச் சென்று படித்துவிட்டு அவசரத்துடன் திரும்பி சட்டையை மாற்றிக் கொண்டு, அரையும் குறையுமாகச் சாப்பிட்டுவிட்டு ரியூசனுக்குப் போய்ப் படித்துவிட்டு, மீண்டும் வீட்டுக்கு வந்து கொப்பிகளை எறிநதுவிட்டு, நண்பி வீட்டுக்குப் போறேன் என்று சொல்லி விட்டுத் திரியும் இன்றைய காலத்துப் பெண்களின் பெற்றோர்கள் யோசிக்க வேண்டிய தேவையுள்ளது.

குழப்பத்திற்கு விடிவு காணப்படாத குடும்பங்களின் உறவுகளுக்கிடையே பல பிரச்சினைகள். ஏதோ காரணங்களுக்காக ஒருவரோடு ஒருவர் கதைக்காமல் பல வருடங்களாகப் பிரிந்த பலர் வாழ்கின்றார்கள்.

மனித வாழ்வில் சேர்ந்து வாழ்வது இனிமையானது. குடும்பங்களுக்குள் பிரச்சினைகளைத் தூண்டி வருபவர்கள் யார்? உறவினர்களா...? நண்பர்களா...? இரண்டு பேர்களாலும் பிரச்சினை வரக்கூடிய சாத்தியக் கூறுகள் நிறையவே இருக்கின்றன.

விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு இல்லாமல் எதையும் இலகுவில் அணுகமுடியாத பிரச்சினைகள் நிறையவே தலைவிரித்தாடுகின்றன. போட்டி, பொறாமையே இதற்கு காரணமாக அமைகின்றது.

போட்டி இருக்கலாம் ஆனால், பொறாமை இருக்கக்கூடாது. பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்படுபவர்கள் - பிரச்சினையை உண்டு பண்ணுபவர்களிடம் எதையும் எதிர்பார்க்கமுடியாது.

ஆகவே பிரச்சினையை உண்டுபண்ணுபவர்களிடமிருந்து கூடுதலான விளைவுகள் ஏற்படும் என்பதைப் பிரச்சினைக்கு உள்ளாக்கப்படுகின்றவர்கள் தெரிந்திருக்கவேண்டும். அதற்கேற்ப பிரச்சினைகளைக் கவனமாகக் கையாளவேண்டும்.

எல்லாக் குடும்பங்களிலும் கூடுதலாக உறவு களுக்குள்ளேதான் பிரச்சினைகள் - பிரிந்து செல்ல வழிவகுக்கின்றன. ஆனால் நண்பர்கள், அயலவர்களிடம் எந்தப் பிரச்சினைகள் என்றாலும் பிறகு சமாதானத் திற்கு வந்து, மறுபடியும் சேர்ந்து விடுவார்கள்.

ஆரம்பகாலத்து மூடநம்பிக்கைகள் எங்களுடன் தொடர்ந்து வருவதால், இதுவும் ஒரு பிரச்சினையாக இருக்கின்றது.

அதாவது பல்லி சொல்லுகின்றது. என்ன நடக்கப்போகின்றதோ என்று தெரியவில்லை...? பூனை குறுக்க போனால்... போகின்ற இடத்திற்குப் போகமல் விடுவது, காகம் கரையுது யாரோ வீட்டிற்கு வரப்போகின்றார்கள்... விக்கல் எடுக்கின்றது யாரோ நினைக்கிறார்கள் - இவற்றுக்குப் பழக்கப்பட்ட நமது மக்களுக்குப் பிரச்சினைகள் இதன் ஊடாகவும் வருகின்றது.

இந்தக் காலத்தில் குடும்பத்தலைவர் உழைக்கும் சம்பளம் வீட்டு வருமானத்திற்குப் போதாததாகவுள்ளது. ஆகவே, குடும்பத் தலைவியும் வேலைக்குப் போனால்தான் வீட்டுச்செலவிற்குப் போதுமாக இருக்கின்றது.

வருமானத்திற்காக வேலைக்குப் போவதால், பிள்ளைகளைச் சரியாகப் பராமரிக்க முடியாமல் போகிறது. வேலை முடிந்து வீட்டுக்கு வரும்போது அங்கே பிள்ளைகள் செய்யும் சேட்டைகளால் வீடு அலங்கோல மாக இருப்பதைப் பார்த்துவிட்டு, களைப்போடு வரும் இருவரும் ஒருவருக்கொருவர் வாக்குவாதப்பட்டு, கடைசியில் பிரச்சினைகளுக்கும் வழிவகுக்கின்றது.

இவற்றுக்கான சரியான வழிமுறைகளைத் தெரிவுசெய்யாமல், ஒருவர்மீது ஒருவர் குற்றம் சுமத்தவும், பிழையான வழியில் சென்று பிரச்சினைகளைக் கூட்டவே தாங்களாகவே முயற்சிக்கின்றார்கள்.

குடும்பம் ஒன்று உருவானால், எந்தப் பிரச்சினை என்றாலும் தாங்களாகவே பேசித் தீர்ந்துவிடவேண்டும். இடையில் வேறு ஒரு பிறநபர் புகுந்து கருத்துச் சொல்லுகின்ற அளவுக்கு இடம் கொடுக்கக்கூடாது.

ஒரு சிலர் எந்தப் பிரச்சினை என்றாலும், வீட்டுக்குள்ளே வைத்திருப்பார்கள். ஒரு சிலர் போக்குவரத்தின்போது, பேருந்தினுள்ளும் பிரச் சினைகளைத் தமது வீடுபோல் மேற்கொள் கின்றார்கள் என்று பல நல்ல கருத்துக்களை கூறி தனது கருத்துக்களை எங்களுடன் பரிமாறிக் கொண்டார்.

**நேர்காணல்:-செல்வா**

## அயல் வீட்டாருடன் நட்பாக இருக்க பழகிக் கொள்ளவேண்டும்



சமாதானமும், ஆனந்தமும் நிறைந்த வாழ்க்கைக்கு நாம் பக்கத்து வீட்டாருடன் சுமுகமாக உறவு இருக்கவேண்டும். பக்கத்து வீட்டாருடன் பகையுடன் இருந்தால், அது நமக்குப் பல பிரச்சனைகளைத் தோறறு விக்கும்.

பக்கத்து வீட்டாருடன் நெருக்கமான உறவை வளர்க்க சில யோசனைகள்.

அயல் வீட்டாரிடம் பணமோ வேறு பொருட்களோ கடன் வாங்காதீர்கள்.

என்ன தேவை ஏற பட்டாலும் நாம் கடன் கேட்காமல் இருப்பது நிலையான நட்பிற்கு உதவும். அயல் வீட்டுக் குழந்தையுடன் உங்கள் குழநதை சண்டை போட்டால், அதில் பெரியவர்களான நீங்கள் தலையிடாதீர்கள். தலையிடுவதால் பிரச்சினை பெரிதாகுமே தவிர தீர்வு ஏற்படாது. உங்கள் குழந்தை களுக்கு மற்றைய குழந்தைகளுடன் நட்புடன் பழகக் கற்றுக்கொடுங்கள். அவர்களது சண்டைகளையும், பிரச்சினைகளையும் அவர்களே தீர்க்கப் பழகிக்கொள்வார்கள்.

அயல் வீட்டாருடன் அதிக நெருக்கமாகப் பழகி, அவர்களின் தனிப்பட்ட குடும்பப் பிரச்சினைகளில் தலையிடாதீர்கள். தங்கள் பிரச்சினைகளை உங்களிடம் மனம் திறந்து சொன்னால் மட்டுமே உங்களால் முடிந்த உதவியை அவர்களுக்குச் செய்யுங்கள்.

அயல் வீட்டாருடன் நீயா, நானா என்பது போன்ற போட்டிகள் ஏற்படாமல் பார்ததுக்கொள்ளவேண்டும். ஏதாவது வருத்தம், கவலைக்குரிய சம்பவம் நிகழ்ந்தால் முதலில் சென்று விசாரித்து ஆறுதல் சொல்லவேண்டும். உதவி தேவைப்படின் உதவி செய்யவேண்டும். அதேபோல சுபநிகழ்வுகள் நடந்தாலும் அதில் கலநதுகொண்டு வாழ்த்துச் சொல்லவும் தயங்கவேண்டாம்.

அதேபோல கருத்து மோதல் அல்லது பிரச்சினை ஏற்பட்டால் சமாதானமாக பேசி முடிக்கவேண்டும். பக்கத்து வீட்டாருக்குத் தொந்தரவு கொடுக்கும் வகையில் நடந்துகொள்ளக்கூடாது.

குழந்தைகள் கண்டபடி சத்தம்போடுவது, ரேடியோவை அலற விடுவது, நாயைக் கட்டிப்போடுவதால், இரவெல்லாம் குரைக்கவிடுவது போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

அயல் வீட்டுக்காரருக்கு இன்னொரு அயல்வீட்டாரைப் பற்றி குறை சொல்ல வேண்டாம். உங்கள் மீதான மதிப்பு குறைந்துவிட வாய்ப்பு உணடு.

தொலைவிலுள்ள நண்பனைவிட அருகில் இருக்கும் எதிரி ஆபத்தில் உதவலாம். எனவே எதிரிகளை நண்பர்களாக ஆக்கமுடியாவிட்டால், குறைந்தபட்சம் மோதல் இல்லாத சூழலைப் பேணுவதே நல்லது. பக்கத்து வீட்டுநட்புறவில் அகங்காரமும், சுயநலமும் வேண்டாம். பண்டிகை காலங்களில் உங்கள் மகிழ்ச்சியை அவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். எப்போது தெருவில் கண்டாலும் ஒரு ஹலோ.... வணக்கம் ஒரு விசாரிப்பு நீங்கள் நிச்சயம் அயலவரை நேசிப்பவர்தான்.

# பிஞ்சுமுகத்தின் தேடல்

அம்மா வருகிறாள். தலையெல்லாம் செம்மண் புழுதி, கையிலே ஒரு சாக்குப்பை- கொஞ்சம் உப்பிக்கிடக்குது. இண்டைக்கு அவளுக்குக் கூலி கிடைச் சிருக்கு. அதனால் முகம் வெயிலில் வாடிக்கறுத்துக் கிடந்தது. இனிமேல்தான் அம்மா அடுப்புப் பற்றவைப் பாள். எனக்குப் பசி வயிற்றைக் குடைந்து கொண்டிருந்தது. காலையில் ஒன்றும் சாப்பிட வில்லை. மத்தியானம் பின் வளவில் நிற்கும் விளாமரத்தடியில் கீழே விழுந்துகிடந்த பழத்தை உடைத்துச் சாப்பிடத் தொடங்க, பக்கத்துவீட்டு அக்கா ஒற்றைக்காலால் நடந்து வந்து வேலியருகில் நின்று கையை நீட்டி னாள். அவள் பாவம் ஆடு மேய்க்கப்போய் மிதிவெடியில் ஒரு காலைவைக்க, அது படாரென்று வெடிக்க... வலதுகால் - முழங் கால்வரை போய்விட்டது. அவளுக்கு அப்பா வும் அம்மாவும் இல்லை. அம்மம்மாதான் வளர்க்கிறா. பள்ளிக்கூடம் போவதில்லை. என்னோடுதான் வேலியருகில் நின்று கதைப் பாள். விளாம்பழத்தை அவளிடம்கொடுத்தேன். ருசித்துச் சாப்பிட்டாள். எனக்கு வாயூறிக் கொண்டிருந்தது.

'ஐயோ! உனக்கு இல்லையே!' சாப் பிட்டு முடிந்த பிறகுதான் அக்காவுக்கு என் ஞாபகம் வந்தது. 'சரியான முட்டாள்' நான் மனதுக் குள் நினைத்தேன். ஆனால், வெளியே சொலல மனம் வரவில்லை. அம்மா வெங்கா யம் முடியப்பேகிறவா. வரும்போது மூலைக் கடையிலை வறுத்த விசுக்கோத்து வாங்கிக் கொண்டு வருவா. அதைச்சாப்பிடலாம் தானே எண்டு நினைச்சுக்கொண்டு, பொச்சுமட்டைக்கு மேலே வைச் சிருந்த தண்ணிக்குடத்தைச் சரிச்சன். எட ஒரு சொட்டுத் தண்ணிகூட இல்லை. எங்கடை வளவுக்கை இருக்கிற கிணறு உப்புத்தண்ணி. அம்மன் கோயிலடிக் கிணறுதான் நல்ல தண்ணி. குடிக்க அங்கை போய்த்தான் அம்மா தண்ணி அள்ளிவருவா. நேற்றுப்பின்னேரம் அம்மா வோடை நானும் நல்ல தண்ணிக் கிணற்றடிக்குப்போனன். அங்கே ஒருத்தர்கூட இல்லை. அம்மா தண் ணிக்குடத்தைக் கீழே வைச்சுப்போட்டு, சும்மா இருந்தா. 'அம்மா தண்ணியை அள்ளனை' நான் இரண்டுதரம் சொன்னன். அம்மா காதிலை விழாததுபோல இருந்தாள். சரியாக இருட்டிக்கொண்டு வந்தது. நல்லகாலம்! கோயில்லை மணியடிக்கிற அப்பு வந்தார். அவர் தண்ணியை அள்ளி எங்கடை குடத் துக்கை விட்டார். எனக்கு கையிலை தண் ணீரை வார்த்துவிட்டார். வயிறு முட்டக் குடிச்சன். திரும்பி வீட்டை வரேக்கை அம்மா வைக் கேட்டன்! 'அம்மா! ஏனனை நீ தண்ணி அள்ளயில்லை'. 'நாங்கள் கோயில் கிணத் திலை அள்ளக் கூடாது பிள்ளை'. ஏன் அள்ளக்கூடாது' என்ரை மனதுக்குள்ளை இந்தக் கேள்வியை அடிக்கடி கேட்டுக்கொள் கிறன். இன்னும் பதில் கிடைக்கவில்லை.

இப்பிடி யோசித்துக் கொண்டிருக்க நேரம் போயிட்டுது. அம்மா எனக்குக் கிட்ட வந்



திட்டா. சாக்குப்பை யைக் கீழே வைச்சிட்டு, குந்தி இருக்கிறா. நான் கிட்டப்போய் அம்மா வின் தோளைப் பிடிச்சன். அவ்வளவுதான் அம்மா குலுங்கிக் குலுங்கி அழுதா. எனக்கு அம்மாவைப் பார்க்க அழுகை வந்தது. 'எல்லாம் முடிஞ்சு போச்சு' அம்மா சொல்லி விம்மினாள் 'என் னம்மா முடிஞ்சுபோச்சு' கேட்க நினைத்தேன் ஆனால் கேட்கவில்லை. சாக் குப்பையை எடுத்துப் பிரிச்சன். அம்மா எழும்பி அடுப் படியுக்கை போகிறா. சாக்குப்பையுக்கை ஒரு நீலச்சாரமும் சிவப்புச்சேட்டும் ஒரு சோடி பாட்டா சிலிப்பரும் கிடந்தது. கீழே எல்லாத் தையும் கொட்டிப்பார்த்தன். ஒரு பழைய போட்டோ! யாரிது? பெரிய மீசை, பரட்டைத் தலை இவர்தான் என்ரை அப்பாவோ? திரும்ப வும் மனதுக்கை கேள்வி வருகுது.

எனர அப்பா எங்கை எண்டு அம்மா வைக் கேக்க ஆசை. ஆனால், அவர் ஏன் எங்களை விட்டிட்டுப்போனார்? என்ர கேள்விக்கு எனக்கு விடை தெரியாது. போனகிழமை எங்கட அம்மன் கோயி லிலை பிரசங்கம் நடந்தது. பெரிய ஒலிபெருக்கி இரண்டை எங்கடை வீட் டுப் பக்கமாகக் கட்டிவிட்டிருந்தினம். யாரோ ஒரு பெரியவர் அரிச்சந் திரனைப் பற்றிப் பேசினார். மக னையும், மனைவியையும் விட்டிட்டுப்போன கதை. அம்மா உரலடியிலிருந்து கேட்டக்கொண்டிருந்தா. எனக்குக் கொஞ்சம்தான் விளங் கியது. இந்தப் பெரியவர்கள் கதை சொல்லும்போது சின்னப்பிள்ளை யளைப் பற்றியோசிக்கிறதில்லை. நான் பள்ளிக்கூடம் போறதில்லை. வயது காணாதாம். எனக்கு வாற வருஷம் ஆறுவயதாகப் போகுதாம். ஆனால், காசில்லையாம். எல்லாம பக்கத்துவீட்டு அக்கா சொன்னசெய் திகள். நான் முற்றத்திலை கோடு கீறிப்போட்டு, மாங்கொட்ட விளை யாடும்போது, அக்கா ஆசையா கப் பார்த்துக்கொண்டிருப்பாள். அவளுக்கு என்னைப்போலத் துள்ளி விளையாட விருப்பம். ஆனால் ஒற்றைக்காலாலை என்ன செய்யமுடியும். நீலா! கால் கவனமடி! அவள் கத்துவாள் - நான்சிரிப்பேன். ஒருநாள் நான் துள்ளிப் பாய்ந்து இடது காலால் மாங்கொட்டையை மிதிக்க அது சறிக்கிவிட தொப்பென்று விழுந்து விட்டேன். நல்லகாலம் காயம் இல்லை. காலுமுறியாமல் தப்பிவிட் டேன். அக்கா ஒருநாள் சொன்னாள் - நீலா! உனக்கு உன்ரை அப்பாவைத்தெரியாது, எனக்குத் தெரியும். அவர் இரவில்தான் வீட்டை வருவார். எனக்கு நிறைய இனிப்பு வாங்கிவருவார். ஆனால், நீ பிறந்தபிறகு அவர் காணாமல் போய்விட்டார். அப்போது அக்கா வானத்தைப் பார்த்தாள். 'அக்கா! வானத்தை ஏன் பாக்கிறாய்?' நான் கிட்டப் போய் அவளைக் கேட்டேன். அவள் கண் களில் நீர்வடிய நின்றாள். 'ஏனக்கா அழுகி றாய்?' நான் கேட்க - அவள் சொன்னாள் - 'என்னுடைய அப்பாவையும் அம்மாவையும் தேடுகிறேனடி!'. எனக்கு மனதுக்கை சிரிப்பு வந்தது. ஆனால், வெளியே காட்டிக்கொள்ள வில்லை 'என்ரை அப்பாவும் அம்மாவும் ஒரு நாள் வானத்திலிருந்து வருவினம் எண்டு அம்மம்மா நான் சின்னப் பிள்ளையாக இருக் கும்போது சொன்னா. நானும் அப்ப நம்பினன்.

ஆனால், இப்ப விளங்குது'. அக்கா அழுத படி சொன்னாள். என்ரை மனதுக்கை இப்ப துக்கம் பொங்கி வந்தது. என்முகம் வாடியது. திடீரெனப் படலையடியில் ஏதோ சத்தம் கேட் டது. என் கனவு கலைந்தது.

அம்மாவும் ஓடிவந்தாள். கோயிலை மணி யடிக்கிற அப்பு - படலையைத்திறந்து கொண்டு வந்தார். நான் அவரைப் பார்க்கமுடியவில்லை. மறைத்துக்கொண்டு அம்மா நின்றாள். அப்பு வுடன் ஏதோ கதைத்தாள். சில நிமிடங்களில் அம்மா திரும்பி வந்தாள். அப்பு திரும்பிக் கொண்டிருந்தார்.

அவருடைய மெலிய உருவமும், வெள்ளை வேட்டியும் என் கண்களில் தெரிந் தன. 'ஏன் இந்த அப்பு வீட்டுக்குள்ளை வாற தில்லை' மீண்டும் எனது மனதில் ஒரு கேள்வி முளைத் தது. அதை உடனே கிள்ளி எறிந்து விட் டேன். அம்மாவின் முகத்தில் வாட்டம் இல்லை. கொட்டிலுக்கை வந்து குப்பிவிளக் கைக் கொளுத்தினாள்.

அந்தச் சுடரைப் பார்க்க வடிவாக இருந் தது. சிலவேளை நான் அந்தச் சுடரை கைகளால் பொத்திப் பிடிக்க வேண்டும் எண்டு நினைப்பன். சுட்டுவிடும் எண்டுபயம். கைவிர லால் சுடருக்கு குறுக்கே கோடுகீறுவேன். அப்பசுடாது. அம்மா கண்டால் பேசுவாள். இப்ப அப்படிச் செய்ய ஆசையாக இருக்கு.

கையில் இருந்த கடிதத்தை அம்மா எழுத்துக்கூட்டிப் படித்துக்கொண்டிருந்தாள். 'மூன்று ஆண்டுகள் அனுமதி... வழங் கப்படுகிறது' அம்மா மீண்டும் அதைச் சற்று உரத்துப்படித்தாள். குப்பிவிளக்கின் ஒளி யிலே அம்மாவின் முகம் புன்னகையோடு தெரிந்தது. எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அம்மாவின் குரல் காதில் விழுந்தது. 'நீலா உனக்கு இல்லத்திற்கு அனுமதி கிடைச்சிட்டுது. நீ இனிமேல் நல்லாப்படிக்கலாம்' எனக்கு நிம்மதியாக இருக்கு. 'என்னம்மா உன்ன விட் டிட்டு நான் போகமாட்டேன்' - என் குரலோடு சிணுக்கத்தையும் சேர்த்துக்கொண்டேன். அம்மா என்னை இழுத்து அரவணைத்துக்கொண்டு சொன்னாள் - 'நீலா... உன்ரை அப்பா .... இனிமேல் வரமாட்டாரடி!' அவள் தொண்டை கம்மியது. குப்பிவிளக்கொளியில் அவள் கண்ணில் கண்ணீர் துளிர்ப்பதைக்கண்டேன். இப்ப மனதுக்கை வந்த கேள்வியை அம்மா விடம் கேட்டேன். 'அம்மா! அப்பா செத்துப் போனாரா?' என்கேள்வி அம்மாவை ஏதோ செய்திருக்கவேண்டும். என்னை இறுக அணைத் தாள. நான் வெளியே நீலமாகச் சிரிந்து கிடந்த வானத்தைப் பார்த்தேன்.

அங்கே ஒரு நட்சத்திரம் என்னைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டியது! நான் அம்மாவை என் சின்னக்கைகளால் இறுகப் பிடித்துக்கொண்டேன். வாய் அம்மாவுக்கு விடை சொன்னது. சரியம்மா...!

**மனோன்மணி சண்முகதாஸ்.**



# குழந்தை சாப்பிட மறுக்கிறதா

சில பெற்றோர்களுக்கு குழந்தைக்கு உணவு கொடுப் பது என்பது பெரும் பிரச்சினை. சாப்பாட்டு வேளை வந்து விட்டால் அம்மாவுக்கும், குழந்தைக்கும் போர்தான். குழந்தைக்குச் சாப்பாடு கொடுப்பது பற்றி சில ஆலோச னைகள்.

ஒரு வயதுவரை குழந்தைகளுக்கு உணவில் பெரிய அளவில் சுவைகள் தெரியாது என்பதால், தாய்க்கு சிரமம் கொடுக்காமல் சாப்பிடுகிறது. அதன் பின் சுவை தெரிய ஆரம்பித்ததும், சாப்பிட அடம்பிடிக்கும். இது எல்லாக் குழந்தைகளிடமும் சகஜம் தான். சாப்பாட்டு நேரத்தை இனிமையானதாக்குங்கள். குழந்தையை மிரட்டியோ, திட்டியோ, அடித்தோ, எதையாவது வாங்கித்தருவதாகச் சொல்லியோ சாப்பாடு கொடுக்காதீர்கள். முதல் சில நாட்கள் மட்டும் இந்த டொனிக் வேலை செய்யும். இரண்டு நாட்களின் பின் அலுத்துவிடும்.

ஒரு வயதுவரை குழந்தைகளுக்கு உணவை ஊட்டிவிடலாம். அதன் பிறகு அவர்களைத் தானாகவே சாப்பிட பழக்கவேண்டும். தானாகச் சாப்பிட்டால் குழந்தை சரியாகச் சாப்பிடாது. தன் கையால் ஊட்டினால்தான் திருப்தி என்பது பல தாய்மார்களின் நினைப்பு.

உண்மையில் ஊட்டிவிடும்போது சாப்பிடுவதைவிட, தானாகச் சாப்பிடும்போது குழந்தை அதிகம் சாப்பிடும். ஆரம்பத்தில் சில நாட்களுக்குச் சாப்பாட்டை சிந்தும், கொட்டும், போகப்போக பழகிவிடும். குழந்தையைத் தானா கச் சாப்பிட அனுமதிக்கும்போது, அது தன்னைப் பெரிய மனிதனாக நினைத்துக்கொண்டு சந்தோஷப்படுமாம்.

குழந்தைக்கு ஒரு வயதானதும் தட்டில் அதற்கான உணவைப் போட்டுக் கொடுத்து விடுங்கள். அது தானாகச் சாப்பிடுகின்றவரை சாப்பிடட்டும். அரை மணி நேரத்துக்குப்பிறகு சாப்பாட்டுத் தட்டை எடுத்து விடுங்கள். அது சரியாகச் சாப்பிடாத வருத்தம் உங்கள் பார்வையிலோ, குரலிலோ தெரியக்கூடாது. தான் சாப் பிடக் கட்டாயப்படுத்தப்படவில்லை என்ற எண்ணம் அதன் மனதில் வரவேண்டும். இந்த அணுகுமுறை கட்டாயம் அதன் மனதில் வரவேண்டும். இந்த அணுகுமுறை கட்டாயம் உங்களுக்குப் பலனளிக்கும்.

குழந்தை சாப்பிடவில்லை என்பதற்காக வீடு முழுக்க டொனிக்குகளை வாங்கி அடுக்காதீர்கள். அது உங்கள் பணத்தைக் குறைக்குமேதவிர, வேறெந்த வகையிலும் பலன் தராது. குழந்தைகளுக்குப் பிடித்தமான வண்ணச் சாப்பாட்டுத் தட்டுகளில் குறைந்த அளவு சாப்பாட்டை வைத்துக் கொடுங்கள். குழந்தை தனக்கு எவ்வளவு தேவையோ, அவ்வளவு தான் சாப்பிடும். அது உங்கள் பார்வைக்குக் குறைவாகத்தான் தெரியலாம். குழந்தை களால் பெரியவர்கள் மாதிரி ஒரேநேரத்தில் மூச்சுமுட்ட சாப்பிடமுடியாது. கொஞ்சநேர இடைவெளி விட்டு சிறிய அளவுகளில்தான் சாப்பிடும்.

எங்கள் வீட்டில் பிள்ளை எதைக் கொடுத்தாலும் சாப்பிடுவதில்லை. இதையே அடுத்த வீட்டில் பிள்ளைக்குச் சாப்பாட்டைச் சாப்பிடக் கொடுத்தால் சாப்பிடுகிறது என்ற குறை எல்லாத் தாய்மாரும் சொல்வதாகும். குழந்தை இப்படிச் சாப்பிடு வதற்கான காரணம் சாதாரணமானது. அடுத்த வீட்டில் சாப்பிடும்போது குழந்தை எவ்வளவு சாப்பிடுகிறது, எப்ப டிச் சாப்பிடுகிறது என்று கழுகுக்கண் கொண்டு யாரும் பார்ப்பதில்லை, மிரட்டுவதில்லை. அதனால்தான் குழந்தை அதன் போக்கில் சாப்பிடுகிறது. எந்தக் குழந்தையும் பட்டினி கிடப்பதில்லை. உணவு கொடுக்கின்ற முறையோ, சூழ்நிலையோ அதற்குப் பிடிக்காமல் போகும்போதுதான் அது சாப்பிட மறுக்கிறது. குழந்தையுடன் நிறைய பேசிக் கொண்டும், விளையாடிக் கொண்டும், சிரித்துக் கொண்டும் சாப்பாடு கொடுத்துப் பாருங்கள் - மாற்றம் தெரியும்.

# இந்த வார பலன்கள்

## 05.03.2004 - 13.03.2004 (திருக்கணிதம்)

| | | |
|---|---|---|
| | சுக்.செவ் ராகு | சனி |
| சூ.புத யுரே | 05 ப 12.12 சிங்-சந்<br>07 மா 05.53 கன்-சந்<br>09 ப 01.15 மீன-புத<br>09 இ 09.40 துல-சந்<br>11 இ 12.38 விரு-சந்<br>11 இ 01.40 இட-செவ் | சந் |
| நெப் | | குரு |
| | கேது | |

### மேடம்
*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*

மேடராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் தொழில் முயற்சிகளில் இழுபாடுகள் தோன்றும். குடும்பத்தில் ஏதோ ஒரு வகை கருத்து வித்தியாசங்கள் ஏற்பட்டு நிம்மதியற்ற சூழ்நிலை இருக்கும். இனத்தவர்களாலும், பிள்ளைகளாலும் தொல்லைகள் ஏற்படலாகும். தேகசுகம் பாதிக்கப்படலாம். எனவே வைத்தியச் செலவுகள அதிகரிக்கும். பண விடயத்தில் வரவிலும் பார்க்கச் செலவு கூடுதலாக இருக்கும். திருமணப் பேச்சுக்கள் காலவரையறையின்றித் தள்ளிப்போகும். கடன் தொல்லைகளும் தலைதூக்கும். உத்தியோகத்தருக்கு வேலைப்பளு அலைச்சல் கூடுதலாக இருக்கும். மின்சார வேலை செய்பவர்கள் அவதானமாகச் செயற்படவும். வர்த்தகர்களுக்கு வியாபரம் மந்தநிலையிலேயே நடக்கும். கடன் வியாபாரம் தொல்லைகளைக் கொடுக்கும். மாணவர்கள் பாடங்களில் கவனக்குறைவாக இருப்பர்.

### இடபம்
*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*

இடபராசியில் ஜெனனமானவர்களுக்கு தொழில் முயற்சிகள் நல்ல பலன்தரும். பணவருவாய் சிறப்பாக அமையும் குடும்பத்தில் ஒற்றுமையும், புரிந்துணர்வும் ஏற்படும். குடும்பப் பெண்கள் திருப்பதியுடன் காணப்படுவர். சிலருக்குப் பிறநாட்டிலிருந்து பொருள் வரவு கிடைக்கலாம். புத்திரர்களால் உதவி உண்டு. தேகசுகம் குடும்பசுகம் பாதிப்படையாது. திருமண முயற்சிகள் கைகூடிவர வாய்ப்புக்கள் உண்டு. அந்நிய தேசப் பிரயாணங்களும் அனுகூலமாகும். உத்தியோகத்தர்கள் உற்சாகத்துடன் பணியாற்றுவார்கள். தொழில் எதுவித தடங்கலுமின்றிச் சிறப்பாக நடக்கும். வியாபாரத்தில் போட்டி பொறாமைகள் மறைந்துவிடும். கொடுக்கல் வாங்கல்கள் திருப்தியாக நடக்கும். புதிய முதலீடுகளை மேற்கொள்ளல் நன்று மாணவர்கள் நல்ல முன்னேற்றத்தையும், சிறப்பையும் அடைவர்.

### மிதுனம்
*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்)*

மிதுன ராசியினருக்கு தொழில் ஓரளவு நன்றாக இருக்கும். பணவரவு இருந்தாலும், வீட்டில் பற்றாக்குறை நிலவும். மனைவி- பிள்ளைகளாலும் செலவு அதிகமாகும். தேவைக்கேற்ப சிக்கனமாகச் செலவு செய்தால், எதையும் சமாளிக்க முடியும். தொடங்கிய விடயங்கள் கைகூடுவதில் தாமதம் ஏற்படும். கொடுக்கல், வாங்கல்களில் அவதானமாக இருக்கவும் பொதுவாக அலைச்சல் கூடுதலாகவே காட்டும். திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையையே காட்டும். வைத்தியச் செலவுகளும் கூடுதலாக இருக்கும். உத்தியோகத்தினர் சுகக்குறைவினால் தமது பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் கஷ்டமடைவர். வியாபாரிகள் சரக்குகளைச் சந்தைப்படுத்த முடியாமல் கஷ்டப்படநேரிடும். கடன் பணத்தை அறவிடுவது கடினம். மாணவர்கள் ஊக்கம் குறைந்து காணப்படுவர்.

### கடகம்
*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*

இவர்களுக்குத் தொழில் நன்றாக நடக்கும். பொருள் வரவும் தாராளமாக இருக்கும். இல்லற வாழ்க்கை சுகத்தையும், இன்பத்தையும் தரும். குடும்ப அங்கத்தவரிடையே புரிந்துணர்வு தென்படும். குடும்பப் பெண்கள் பொருட்கள் வாங்குவதில் கூடுதலாக ஈடுபடுவார்கள். திருமணங்கள் நிச்சயிக்கக் கூடியதாக இருக்கும். தேகாரோக்கியம் நன்றாகவே அமையும். கொடுக்கல் வாங்கல் பிணக்குகள் இருப்பின் அவைதீரும் புதிதாக தொழில் தேடுவோருக்கு உகந்ததாக அமையும். உத்தியோகத்தர்களுக்கு ஊதிய உயர்வு பதவி உயர்வு கிடைக்கலாம். வியாபாரம் நன்கு விருத்தி பெறும். பழைய கடன்களை வசூல் செய்யமுடியும். புதிய முதலீகளுக்கும் நன்று மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர். சிலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

### சிங்கம்
*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*

சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் சிறுபிரச்சினைகள் தோன்றிப் பெரிதாக வராமல் மறைந்துவிடும் தொழில்துறை சிறப்பாக அமையும் பணவரவு தேவைக்கேற்க வந்துகொண்டிருக்கும். மனைவி, பிள்ளைகளால் செலவு அதிகமாகும். குடும்பப்பெண்கள் வரவுக்கேற்ப செலவு செய்து பொறுமையைப் பேணிக் கொள்வது நன்று. தொடங்கும் கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவுபெறும். திருமணப்பேச்சுக்கள் தாமதத்தை ஏற்படுத்தும் தேக சௌக்கியத்தைப் பேணுதல் நன்று. உத்தியோகத்ததினருக்கு வேலைப்பழு அதிகமாகும். கூடிய அக்கறையும், அவதானமும், தேவைப்படுகிறது. சக ஊழியரின் ஒத்துழைப்பு உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் கணிசமான இலாபம் கிடைக்கும். பழைய முதலீடுகள் எளிதில் விற்பனையாகிவிடும். மாணவர்கள் கூடிய அக்கறை எடுக்கவேண்டும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படாலாம்.

### கன்னி
*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*

கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் தொழில் துறை நன்றாக இருப்பினும், அதிக பிரயாசையும் வருவாக் குறைவும் தென்படும் குடும்பத்தில் கணவன் மனைவியிடையே கருத்து வேற்றுமைகள் ஏற்படலாம். உறவினர்கள் தேவையில்லாத பிரச்சினைகளைக் கொண்டு வருவார்கள். அதிக செலவுகள் ஏற்பட இடமுண்டு குடும்பப் பெண்களுக்குப் பொறுப்புக்கள் கூடுதலாக இருக்கும் எல்லாவற்றையும் சமாளித்துப் பொறுமையுடன் இருப்பது நன்று. திருமணப்பேச்சுக்கள் காலதாம தத்தை ஏற்படுத்தும். உத்தியோ கத்தினரின் பணிகள் திருப்தியில்லாமல் இருக்கும். வியாபாரிகளுக்கு இலாபம் மிகக்குறைவாகவே இருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். மாணவர்கள் ஊக்கம் குறைந்து காணப்படுவர். முன்னேற்றம் திருப்திதராது.

### துலாம்
*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*

துலாராசியினருக்கு தொழில்துறையில் சிறப்பு ஏற்படும். முயற்சிக்கேற்ப லாபம் உண்டு. குடும்பத்தில் ஒற்றுமையும், புரிந்துணர்வும் காணப்படும் புத்திரர்களால் பெருமை, மனமகிழ்ச்சி ஏற்படலாகும். குடும்பப் பெண்கள் தமக்குத் தேவையான பொருட்களை வாங்கிச் சேகரிப்பதில் ஆர்வம் காட்டுவர் தேகசுகம் புதுத்தென்புடன் இருக்கும். வெளிநாட்டிலிருந்து வருவாய் கிடைகக இடமுண்டு திருமணப் பேச்சுக்கள் நிச்சயப்படுத்தக் கூடியதாக இருக்கும். தனித்தொழில் செய்வோர் இலாபமடைவர். உத்தியோகத்தர்களுக்கு தமது பணியில் ஊக்கமும், சிலருக்கு ஊதய உயர்வும் கிடைக்கலாம். வியாபாரம் சிறப்பாக நடந்து நிறைய இலாபம் கிடைக்கும் புது முதலீடுகள் நன்று. மாணவர்கள் ஊக்கமும் முன்னேற்றமும் உடையவராக இருப்பர்.

### விருச்சிகம்
*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*

விருச்சிக ராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் நற்பலன் குறைவாகவே இருக்கும். தொழிலில் பிரயாசை, அலைச்சல் கூடுதலாக காணப்படும். குடும்ப அங்கத்தவர்களிடையே மனக்கவலை குழப்பம் என்ற நிம்மதியற்ற நிலை தோன்றும். இன பந்துக்களுடனும், சகோதரர்களுடனும் மனக்கசப்பு ஏற்படலாம். பொருளாதாரம் பற்றாக்குறையாகவே இருக்கும். எப்படியும் செலவுக்குப் போதாமல் இருக்கும். குடும்பப் பெண்கள் வீண்தனமாக குற்றம் கேட்கக் கூடும். திருமணப் பேச்சுக்கள் இழுபறிநிலையைக் காட்டும். தலைவலி, காய்ச்சல் போன்ற தேக சுகக்குறைவுகளும் ஏற்படலாம். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். சிலருக்கு வசதி குறைந்த இடம் மாற்றங்கள் வரக்கூடும். வர்த்தகர்களுக்கு வாடிக்கையாளரின் வரவு குறையும். அதிக இலாபம் கிடையாது. மாணவர்களுக்கு முன்னேற்றம் குறைவாக இருக்கும்.

### தனுசு
*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*

தனு ராசிக்காரருக்கு குருவின் பார்வை இருப்பதால், குடும்பத்தில் சிறப்பும், ஒற்றுமையும் நல்ல வருவாயும் தென்படும். கணவன் மனைவியிடையே நெருக்கமான உறவு தென்படும்.

தேவைக்கேற்ற பணம் கிடைக்கும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்க வாய்ப்புண்டு. குடும்பப் பெண்கள் குதூகலத்துடன் காணப்படுவர். தேகாரோக்கியம் நன்றாக இருக்கும். திருமணத்தை எதிர்நோக்கும் பெண்களுக்கு மாங்கல்ய பாக்கியம் கிடக்கும். புது வாழ்க்கை ஆரம்பமாகும். உத்தியோகத்தர்கள் உற்சாகத்துடன் காணப்படுவர். சிலருக்குத் திருப்தியான இடமாற்றம், சகஊழியரின் ஒத்துழைப்பு கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். தேங்கியிருந்த சரக்குகள் விற்பனையாகி பணம் சேரும். மாணவர்கள் பலராலும் பாராட்டுப் பெறுவர்.

### மகரம்
*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திரு வோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*

மகர ராசியினர்க்கு குடும்பத்தில் அலைச்சல்கள், வேலைப்பழு அதிகம் இருக்கும். செலவுக்கேற்ப வருவாய் இருக்கும். தொழில் கஷ்டமில்லாமல் நடந்துகொண்டிருக்கும். குடும்பப் பெண்கள் தேவையறிந்து சிக்கனமாக வாழ்க்கை நடத்துதல் நன்று.

கொடுக்கல், வாங்கல்கள் சில சந்தர்ப்பங்களில் தொல்லை கொடுக்கும். அவதானம் தேவை. நண்பர்கள் உதவி செய்பவர்களாக இருப்பர். திருமணப் பேச்சுக்கள் தாமதத்தை ஏற்படுத்தும். தனித் தொழில் புரிவோர்க்கு ஓரளவு நன்மை உண்டு. உத்தியோகத்தர்கள் கடினமாகப் பணிபுரியவேண்டியவர்களாக இருப்பர். உயரதிகாரிகளுடன் இதமாக நடந்துகொள்ளவும். வியாபாரம் சிறப்பாக நடைபெறாது. வங்கி உதவிகள் இழுபறியின் பின்னரே கிடைக்கும். மாணவர்கள் அதிகம் ஊக்கமெடுத்தல் வேண்டும்.

### கும்பம்
*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்)*

கும்பராசியில் பிறந்தவர்களுக்கு பல நற்பலன்கள் இவ்வாரம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி, ஒற்றுமை சிறப்பாக இருக்கும். செய்தொழில் நன்றாக அமையும். தூரத்திலிருந்த உறவினரின் வருகை அதிகமாகும். பொருளாதாரம் சிறப்பாக அமையும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் கைகூடலாம். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடனும் சுறுசுறுப்பாகவும் காணப்படுவர். கொடுக்கல், வாங்கல் பிரச்சினைகள் இராது. திருமணப் பேச்சுக்கள் நிச் சயிக்கப்படும் சாத்தியம் உண்டு. உத்தி யோகத்தர்களுக்க தொழில் உயர்ச்சி, கௌரவம், ஊதிய உயர்வு முதலியன கிடைக்கலாம். வத்தகர்களுக்கு வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெறும். பழைய முதலீடுகள் யாவும் விற் பனையாகும். மாணவர்கள் கல்வியில் வளர்ச்சியடைவர். பலருக்கு உயர்கல்வி அனுகூலங்கள் தென்படுகின்றன.

### மீனம்
*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*

இவர்களுக்கு செய்தொழில் விருத்தி நன்றாக அமையும். பணவரவு நன்றாக இருந்தாலும் அதற்கேற்ப செலவுகளும் இருக்கும். குடும்பத்தில் சுமுகமானநிலை தோன்றும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும், சிறப்பும் ஏற்படலாகும். சிலருக்கு காணி இருப்பிடம் சம்பந்தமான பிணக்குகள் ஏற்படக்கூடும். குடும்பப் பெண்கள் உற்சாகமாக காணப்படுவார்கள்.


பொறுமை சிக்கனம் என்பவற்றைக் கடைப்பிடித்தல் நன்று. இல்லறத்தில் இணைய விரும்புவோர்க்கு காலதாமதம் ஏற்படும். வெளிநாட்டுப் பிரயாணங்களும் கஷ்டத்தையே கொடுக்கும். உத்தியோகத்தர்களும் தமது பணிகளைச் செவ்வனே நடத்திப் பாராட்டைப் பெறுவர். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக நடக்கும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. மாணவர்கள் பாடத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

## புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி XXI - சிவா சின்னப்பொடி

# தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள்

இனவாதத்துக்கும், நிறவெறிக்கும் எதிரான ஒரு அமைப்பு அப்போது பாரிஸிலிருந்தது. அந்த அமைப்பின் தலைவராக ஆபிரிக்க கறுப்பினத்தைச் சேர்ந்த லோரோன் உம்பக்கி என்பவர் இருந்தார்.

நானும், கஜனும் அவரை அவரது அலுவலகத்துக்குச் சென்று சந்தித்து இதுபற்றி முறையிட்டபோது, அவரும் பாரிஸில் இப்படி



இருக்கிறதா? என்று ஆச்சரியப்பட்டார். அவரின் ஏற்பாட்டின் பேரில் 1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி மாலையில் அவரது அமைப்பைச் சேர்ந்த மூன்று பிரெஞ்சுக்காரர்களைக் கொண்ட குழு- முன்கூட்டியே கையடக்கமான விடியோ கமரா மற்றும் ஒலிப்பதிவுக்கருவியுடன் சென்று, அந்தக் கபே பாரிஃப் பொருத்தமான இடத்தில் இருந்து கோப்பி குடித்துக்கொண்டிருக்க - இனவாதத்துக்கும், நிறவாதத்துக்கும் எதிரான அந்த அமைப்பால் தயார்படுத்தப்பட்ட இரு தமிழ் இளைஞர்கள் சென்று கோப்பி கேட்டனர்.

வழக்கம் போல் அந்தக் கபே பாா முதலாளி கேப்பி தரமுடியாது என்று மறுத்து, நம்மவர்களை உடனடியாக தனது கடையை விட்டு வெளியேறும்படி கத்தினார்.

நம்மவர்கள் ஏன் எங்களுக்கு கோப்பி தரமுடியாது? என்று கேட்க, அவர் அடிமை நாய்கள் ... கறுப்புநாய்கள் என்று தொடங்கி எழுத்தில் எழுதமுடியாத கெட்ட வார்த்தைகளில் எல்லாம் திட்டினார்.

அங்கே கோப்பி குடித்துக் கொண்டிருந்த இனவாதத்திற்கு எதிரான அமைப்பைச் சேர்ந்த மூவர் இதையெல் லாம் ஒன்றும் விடாமல் படம் பிடித்தது.

பின்னர் ஆதாரத்துடன் அவருக்கெதிராக காவல்துறையில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, அந்த நபர் கைது செய்யப் பட்டதுடன், அவரது கபே பாருக்கும் சீல்வைக்கப்பட்டது. பின்னர் இது தொடர்பாக நடந்த வழக்கு விசாரணையில், அவருக்கு ஒரு வருட சிறைத்தண்டனையும், 50 ஆயிரம் பிராங் அபராதமும் விதிக்கப்பட்டது.

சிறைத்தண்டனை முடிந்து வெளியே வந்த அந்த நபர் -பழையபடி அந்தக் கபே பாரைத் திறந்தபோதும், அவரிடம் அந்த பழைய இனவாத, நிறவாதப்போக்கு மாறவில்லை.

பின்பு நம்மவர்க்குக் கோப்பி இல்லை என்று மறுக்காமல், ஒரு கோப்பி 5 பிராங் என்றால் இவர் நம்மவர்க்கு 10 பிராங் என்று சொல்வார். ஆனால், தொடர்ச்சியாக நம்மவர்களை லா சப்பல் பகுதியை தமிழ் மயமாக்கி வர அவரால் தடுக்கமுடியவில்லை.

அந்தக்கடையை விற்றுவிட்டு, வேறு இடத்திற்குச் சென்றுவிட்டார்.

தற்போது அந்தக் கபே பார் இருந்த இடத்தில் தமிழர்களுடைய பல்பொருள் அங்காடி ஒன்று இருக்கின்றது.

மத அடிப்படை வாதிகளின் ஊடுருவல், இனவாதிகளின் அச்சுறுத்தல், தொழில் வழங்குநர்களின் ஈவிரக்கமற்ற சுரண்டல் இவற்றுக்கு மத்தியில் தமிழர்கள் தங்களை ஒரு சமூகமாகப் புலம்பெயர்ந்த நாடுகளில் ஒருங்கிணைக்கமுற்பட்டபோது, அவர்களுக்குத் தமிழ் அடையாளம் பற்றிய பிரச்சினை எழுந்தது.

எங்களுடைய தனித்துவ அடையாளம் என்ன? எங்களுடைய பண்பாடு என்ன? எங்களுடைய கலாசாரம் என்ன? இவ்வாறான கேள்விகள் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒவ்வொருக்கும் எழுந்தது.

இங்கே தாயகத்திலும்கூட இந்தக் கேள்விகளுக்கான சரியான விடைகள் இன்னமும் கிடைக்காதபோது, புலம்பெயர்ந்த தங்களுக்குத் தெரிந்ததை வைத்துக்கொண்டு, தங்களைத் திருப்திப்படுத்திக் கொண்டார்கள்.

தினசரி சோறு சாப்பிடுவது, தேங்காய்ப் பால் விட்டு கறி சமைப்பது, வாரம் ஒருமுறை ஆட்டுப் பங்கு இறைச்சி சாப்பிடுவது, வாரம் ஒருமுறை உயிர்க்கோழி இறைச்சி சாப்பிடுவது (கோழி இறைச்சி என்றால் அங்கு குறைந்த பட்சம் ஒருவாரத்துக்கு முன்னம் கொல்லப் பட்ட கோழியைக் குளிர்சாதனப் பெட்டியில் பதப்படுத்தி வைத்து எடுத்துச் சமைப்பதுதான் வழக்கம்) இந்துக்களாக இருப்பது, வெள்ளிக்கிழமை மாமிசம் உண்ணாமல் இருப்பது, இவையெல்லாம்தான் அப்போது புலம்பெயர்ந்த தமிழர்களின் தமிழ் அடையாளமாக இருந்தது.

பண்பாடு என்று சொல்கிறபோது - மரபின் அடிப்படையில் தங்களைப் பிரித்துக்கொள்வது - அதாவது பிரதேசரீதியாக, ஊர்ரீதியாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொள்வது, சாதிரீதியாக அடையாளப்படுத்திக் கொள்வது, தமிழன் என்றால் - அவன் சாதி இல்லாமல் மதம் இல்லாமல் இருக்கமுடியாது என்று நினைப்பது, அவன் மதம் மாறினாலும் சாதி மாறமுடியாது என்று நம்புவது.

தலைப்பிள்ளை ஆண்பிள்ளையாகப் பிறகக வேண்டும் என்று நினைப்பது, திருமணம் என்றால் பெண்ணிடம் சீதனம் வாங்கவேண்டும் என்று நினைப்பது, பெண்பிள்ளை பருவமடைந்தால் சாமர்த்தியச்சடங்கு செய்யவேண்டும் என்று நினைப்பது -

கலாசாரம் என்கின்றபோது - பெண்கள் பொது நிகழ்வுகளுக்குப் புடவை கட்டுவது, பொட்டு வைப்பது. தைப்பொங்கல், சித்திரை வருடம், தீபாவளி திருநாட்களைப் பண்டிகைகளாகக் கொண்டாடுவது, திருவிழா நடத்துவது, தேர் இழுப்பது, கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம் கற்பது, திருமண விழா, பணவரவுச் சடங்கு நடத்துவது ... இப்படித் தொடரலாம்.

நான் இப்படி எழுதுகின்றபோது எந்த ஒரு தரப்பினையும் இழிவுபடுத்துவதாக யாரும் நினைக்கக்கூடாது.

கடந்த 2000 வருடங்களாகத் தொடர்ச்சியாக தமிழ் இனம் தனது தனித்துவ அடையாளங்களையும், பண்பாட்டையும், கலாசாரத்தையும் மாற்றினங்களிடம் இழந்து வந்திருக்கிறது.

(தொடரும்...)

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*நனவினான் நல்லாக் கொடியார் கனவினான்*
*என்எம்மைப் பீழிப் பது.*

திருக்குறள்

## நமது நோக்கு

### தமிழ் மக்களின் வாக்குரிமையை அரசு நிராகரிக்குமேயானால்...

ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள நாடாளு மன்றத் தேர்தலில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து, அதாவது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் மக்கள் தமது ஜனநாயக ரீதியிலான வாக்க ளிக்கும் உரிமையை முழுமையாகப் பயன்படுத்த தடை யாகவுள்ள அனைத்து முட்டுக்கட்டைகளும் நீக்கப்பட்டு அவர்கள் எந்தவிதமான அச்சுறுத்தல்கள், அழுத்தங் கள் மற்றும் பாதுகாப்புப் படையினரின் அநாவசியமான சோதனை நடவடிக்கைகள் எதுவுமின்றி இயல்பாகவும், சுதந்திரமாகவும் அவர்கள் தமது வாக்குகளை அளிப் பதற்கான உரிமையை இலங்கை ஜனாதிபதியும், அரசும், ஏனைய பௌத்த சிங்கள பேரினவாத அமைப்புக்களும் தொடர்ந்தும் நிராகரித்து வருவதாகவே தெரிகின்றது.

அர்த்தமற்ற - நியாயமற்ற காரணங்களை முன்வைக் கும் இவர்களின் உள்நோக்கம் வெளிப்படையானது.

தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக ஓரணியில் நின்று தமது வாக்குகளை அளிப்பார்களேயானால் அதனால் தமக்கும் தம்மை ஆதரிக்கும் தமிழ்க் குழுக்களுக்கும் தேர்தல் முடிவுகள் பாதகமான விளைவுகளை ஏற்படுத் தும் என அவர்கள் அஞ்சுகின்றார்கள்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிவாழ் தமிழ் மக்கள் தாம் வசிக்கும் பகுதிகளில் எதுவிதமான அச்சுறுத்தலோ, அழுத்தமோ இன்றி மிகவும் இயல்பாக வாழ்ந்துவருகின் றார்கள் என்பதை சர்வதேசசமூகம் இன்று நன்கு உணர்ந் துள்ள வேளையில் அங்கு தேர்தலை நடத்தமுடியாது என்று ஜனாதிபதி கூறுவதற்கு அவர் தமிழ் மக்களின் ஜனநாயக அரசியல் ரீதியான உரிமைகளை அங்கீகரிப்ப வராக இல்லை என்பதே காரணமாகும்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் போர் தீவிரமாக நடந்து கொண்டிருந்த காலப்பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல்கள் உட்பட எந்தத் தேர்தலையும் நடத்தமுடி யாத சூழ்நிலை இருந்தது என்னவோ உண்மைதான்.

அதற்குக் காரணம் விடுதலைப் புலிகள் அல்ல. சிங் கள அரசாங்கங்களின் அடக்குமுறைகள், இராணுவ ரீதியிலான ஒடுக்குமுறைகள், மற்றும் பல்வேறுபட்ட தடை கள் போன்றவைகளால் ஏற்பட்டிருந்த இயல்பற்றதும், தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பற்றதுமான சூழ்நிலை களேயாகும்.

ஒடுக்குமுறையின் கொடுமைகளுக்கு உள்ளாகி இடம் பெயர்ந்தும், புலம்பெயர்ந்தும் அலைந்து தம் வேர்விட்டு விலகி வாழ்ந்த தமிழ் மக்கள் தேர்தலில் வாக்களிக்கும் மனோபாவமற்றவர்களாகவே அப்போது இருந்தனர். அவர் கள் தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் எதையும் சாதிக்க முடியாத நிலையும் அப்போது இருந்தது. போரின் அழுத் தங்களுக்குள் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்த மக்கள் தேர்தலில் வாக்களிப்பதென் பது கேலிக்கூத்தான விடயம் என்பதால் அப்போது அவர் கள் தேர்தலை நிராகரித்தார்கள்.

அப்போதைய யுத்தச்சூழலை தேர்தலை நடத்த பாது காப்பற்றது என அரசு நினைத்தது என்பது மற்றொரு விடயமாகும்.

ஆனால், இப்போது நிலைமை அப்படியல்ல... இரண் டாண்டு சமாதான சூழலில் தமக்கான வாக்களிக்கும் உரிமையை தமிழ்மக்கள் இம்முறை முழுமையாக பயன் படுத்த முனைப்புக் கொண்டுள்ளனர்.


விடுதலைப்புலிகளும் இந்தத்தேர்தலில் தமிழ்மக்கள் தமது ஜனநாயக உரிமையை உறுதிசெய்ய அனுமதித்து விட்டுள்ளதுடன், தேர்தலை தமதுபகுதிகளிலும் சுமுக மாக நடத்த ஒத்துழைப்பு வழங்கத் தயார் என அறி வித்துள்ளதுடன், அதனை முழுமையாக நடத்த எல்லா வகையிலும் விட்டுக்கொடுப்புகளை மேற்கொள்ளவும் முன்வந்துள்ள நிலையில் அரசதரப்பு பின்வாங்குவது ஏன் என்ற கேள்வி எழவே செய்கிறது.

தமிழ் மக்களின் வாக்குகள் தங்களின் அரசியல் எதிர் காலத்திற்கு பல்வேறு வகையில் பாதிப்பை ஏற்படுத்தும் என அரச தரப்பு அஞ்சுகிறது. அவ்வளவுதான்!

எதிர்வரும் தேர்தலில் தமது கட்டுப்பாட்டுப்பகுதிகளில் அல்லது யுத்த சூனிய பகுதிகளில் வாக்களிப்பு நிலை யங்கள் அமைக்கப்படல் வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோருவது நியாயமானது என்று சுதந்திரமான தும், நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டுக் குழுவான பவ்ரல் தேர்தல் ஆணையாள ருக்கு தெரிவித்துள்ளமையை இக்கட்டத்தில் சமாதா னத்தை வலியுறுத்தும் அனைத்து சர்வதேச சக்திகளும் புரிந்து கொள்ளவேண்டும்.

அர்த்தமற்ற காரணங்களைக் கூறி, தங்களின் சொந்த அரசியல் அபிலாஷைகளை எட்டுவதற்காக தமிழ் மக் களின் வாக்குரிமையை இலங்கையின் அரச அதிகார பீடத்தவர் நிராகரிக்க முயலுவார்களேயானால், தமிழ்மக் கள் தமது ஜனநாயக சுதந்திர உரிமைகளை வென் றெடுப்பதற்காக சமாதான வழிகளில் நம்பிக்கை இழக்க நேரிடும் என்பதையும் அத்தகையதோர் நிலமை இலங்கை யின் எதிர்காலத்தை மோசமாகப் பாதிக்கவே செய்யும் என்பதையும் கூறவேண்டிய அவசியம் இச்சமயத்தில் ஏற் படவே செய்கிறது.

## நாடும் நடப்பும்




செய்தி:
நிரந்தர சமாதானத்தை எற்படுத்த மீண்டும் மக்களின் ஆணையை வேண்டியே தேர்தலில் நிற்கிறோம்
- சந்திரிகா -

# விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் எந்தக்கட்சியையும் நம்பியிருக்கவில்லை!

## மலையக மக்கள் முன்னணி வேட்பாளர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் எந்தத் தேசியக்கட்சியையும் நம்பிக்கொண்டிருக்கவில்லை. மக்கள் சக்தியோடு ஆட்சியமைக்கும் எந்தக் கட்சியுடனும் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த அவர் தயாராக இருக்கிறார் என, மலையக மக்கள் முன்னணியின் வேட்பாளரும் கட்சியின் செயலாளருமான மு.சிவலிங்கம் தெரிவித்தார். தொடர்ந்து அவர் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் -

இனி மேலாவது மலையகக் கட்சிகள் தனியொரு தேசியக் கட்சிக்கு வக்காலத்து வாங்கும் செயற்பாட்டைத் தவிர்த்துக் கொண்டால், அவர்களின் அரசியல் நாகரிகத்திற்கு மரியாதை கிடைக்கும். மலையகமக்கள் முன்னணியைப் பொறுத்தவரை யில் - ஐக்கிய தேசியக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய இரண்டில் ஒன்றுதான் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆட்சியை அமைக்கும். ஆட்சியை அமைக்கும் எந்தக் கட்சி யோடும் உறுதியான உடன்படிக்கையுடன் மலையக மக்கள் முன்னணி கூட்டுச் சேரலாம்.

அரசியல் தொலைநோக்குப் பார்வை இல்லாமல் வெறு மனே பதவிகளுக்காகத் தேசியக்கட்சிகளோடு ஒன்றுபடுவதன் மூலம், சிறுபான்மைக் கட்சிகள் அரசியலில் சேரப்போகிறது. சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமைகளை ஒடுக்குவதில் இரண்டு தேசிய சிங்களக் கட்சிகளின் நிலைப்பாடும் ஒரே விதமானவை எனத் தெரிவித்தார்.

# இலக்கிய நூல்களுக்கான பரிசுத்திட்டம் - 2003!

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்ட 8 மாவட் டங்களைச் சேர்ந்த எழுத்தாளர்களிடமிருந்து 2003 ஆம் ஆண்டுக்கான இலக்கிய நூல்களுக்கான பரிசு வழங்கும் திட்டத்திற்கு நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், சிறுவர் இலக்கியம், இலக்கிய ஆய்வும் விமர்சனமும், உயர்கல்விக்கான நூல்கள் ஆகியனவும் இத்துறைகளைச்சாராத ஏனைய நூல்களையும் போட்டிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

எழுத்தாளர் ஒருவர் சகல போட்டிகளிலும் கலந்துகொள் ளலாம். மேலும் பங்குபற்றும் எழுத்தாளர் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்ட 8 மாவட்டங்களில் ஒன்றைச் சேர்ந்தவராக இருப்பதோடு, நூல்கள் 2003 ஆம் ஆண்டு ஜன வரி 1 ஆம் திகதி தொடக்கம் 2003 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் அச்சில் வெளிவந்ததாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு போட்டிக்கும் 4 பிரதிகள் அனுப்பிவைக் கப்படவேண்டும்.

போட்டிக்கான நூல்கள் ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் “உதவிப்பணிப்பாளர்” பண்பாட்டலுவல்கள் அமைச்சு, திருகோ ணமலை என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள் ளது.

# வேட்பாளர் படுகொலைக்கு ஜனாதிபதியே முழுப்பொறுப்பு

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியி டவிருந்த வேட்பாளர்கள் அரசியல் படுகொலை செய்யப்பட்ட மைக்கு ஜனாதிபதி சந்திரிகாவே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின் செயலாளர் செனரத் கப்புகொட்டுவ - ஜனாதிபதிமீது குற்றம் சாட்டினார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஜனாதிபதியே பாதுகாப்பு அமைச்சு மற்றும் உள்துறை அமைச்சு என்பனவற்றிற்குப் பொறுப்பாக உள்ளார். எனவே இக்கொலைக்கு அவரே பொறுப்பேற்கவேண்டும்.

அத்துடன், தேர்தல் வேட்பாளர்களுக்கு இதுவரை போது மான பாதுகாப்பு எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால், வேட் பாளர்கள் கொல்லப்படும்போது, ஜனாதிபதி மௌனமாக இருக் கின்றார். இந்தப் படுகொலை நடந்த பின்னரும்கூட ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பு வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

# மோசடிகள் இடம்பெற்றால் மீளவும் தேர்தல் நடத்தும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு உண்டு!

## பவ்ரல் அமைப்புத் தெரிவிப்பு

(கொழும்பு)

மோசடிகள் இடம்பெறும் வாக்களிப்பு நிலையங்களில் வாக்குப்பதிவை இரத்துச்செய்து, மீண்டும் அந்தத் தேர்தல் தொகுதியில் வாக்களிப்பை நடத்துவதற்கான முழுமையான அதிகாரம் உயர் நீதிமன்றத்தின்மூலம் தேர்தல் ஆணையாள ருக்குக் கிடைத்துள்ளதாகப் பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்றிக்கோ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

இந்த மாநாட்டில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், வாக்களிப்பு நிலையம் ஒன்றில் மோசடி நடைபெறும் பட்சத் திலோ அல்லது, வாக்களிப்பதற்குச் சுதந்திரமான சூழ்நிலை வாக்களிப்பு நிலையத்தில் இருக்காது விடும் பட்சத்திலோ, அந்த வாக்களிப்பு நிலையத்தின் வாக்குப்பதிவை இரத்துச் செய்து, மீண்டும் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான அதிகா ரத்தை உயர் நீதிமன்றம் வழங்கியிருப்பதாகவும் தெரிவித் தார்.

எனவே, தமது வெற்றியை நிச்சயப்படுத்திக்கொள்ளும் வகையில், கட்சிகள் வாக்கு மோசடிகளில் ஈடுபடுவதில் எந்த விதப் பயனும் கிடைக்கப்போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மாமனிதர் சிவச்சந்திரன் சுந்தர் நினைவாக...

- அகளங்கன் -

# நெஞ்சில் நிறைந்து நிலைத்த சிரித்திரன் சுந்தர்



**1970** ஆம் ஆண்டிலிருந்துதான் சிரித்திரன் சஞ்சிகைகளைக் கிரமமாகப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அதுவரை கிடைத்த சில சிரித்திரன்களை மட்டும் வாசித்திருக்கின்றேன்.

எனது மூத்த சகோதரர் ஒருவர் தொடர்ச்சியாகச் சிரித்திரன் சஞ்சிகைகளை வாங்கத் தொடங்கியிருந்தார். சிரித்திரன், சுடர் ஆகிய சஞ்சிகைகளும், சுதந்திரன், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளும், வீரகேசரிப்பிரசுர நூல்களும், 1970 களிலிருந்து தொடர்ந்து எங்கள் வீட்டுக்கு எடுக்கப்பட்டன.

வட்டில் அத்தனை பேருக்கும் மகிழ்ச்சியையும், சிரிப்பையும், அவற்றினூடே கருத்துக்களையும் வழங்குகின்ற சஞ்சிகையாகச் சிரித்திரன் திகழ்ந்தது.

அம்மா, அப்பா உட்பட யாவரும் வாசித்து நகைச்சுவைகளைப் பகிர்ந்து கொள்வோம். மகுடி கேள்வி - பதிலைப்பற்றி கதைப்போம். சிரித்திரன் ஆசிரியரின் கருத்துச் சித்திரம் வரையும் ஆற்றலையும், சிந்தனைச் செழுமையையும் புகழ்வோம்.

அப்பா வீட்டுக்கு வருபவர்களிடமெல்லாம் சிரித்திரன் சஞ்சிகைகளில் வெளிவந்த நகைச்சுவைகளைப் பற்றி பலவாறாகச் சிலாகிப்பார்.

இத்தனைக்கும் எமது ஊர், வவுனியா நகரிலிருந்து மன்னார் வீதியில் எட்டுக்கிலோ மீறறர் மேற்கே சென்று, மூன்றரை கிலோ மீற்றர்வரை காட்டுக்கூடாக வடக்கே சென்று அடையபபடவேண்டிய சிறுகிராமம் - பம்பைமடு அதன் பெயர்.

இத்தகைய குக்கிராமங்களுக்கும் சிரித்திரன் சென்றது என்பதற்காகவே இதனை எழுதுகின்றேன். வேறு எந்த இலங்கைச் சஞ்சிகைக்கும் இத்தகைய சிறப்பு இன்றும் இல்லை என்றே சொல்லலாம்.

உண்மையில் மக்கள் சஞ்சிகை என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தது சிரித்திரன் என்றால் அது மிகையில்லை.

புகையிரத்தினுள் பத்திரிகைகளை, சஞ்சிகைகளை விற்கின்ற ஒருவன் - ஒரு மூலையில் இருந்து சிரித்திரன் வாசிப்பதைப் பார்த்த சிரித்திரன் சுந்தர்ஐயா - மனம் மகிழ்ந்துபோய், தனது சஞ்சிகையின் நோக்கம் நிறைவேறுகிறது என ஒரு தடவை எனக்குச் சொல்லியிருக்கிறார். பாமரர்களுக்கும் தனது சஞ்சிகை பலனளிக்கவேண்டும் என்பது அவர் அடிக்கடி கூறும் கருத்து. அதேபோல பின்தங்கிய கிராமங்களுக்கும் தனது சஞ்சிகை செல்லவேண்டும் என்ற விருப்பம் கொண்டிருந்தவர் அவர்.

யாராவது இருவர் சோடியாக அடிக்கடி கதைத்தால், அவர்களைப்பார்த்து 'சவாரித்தம்பரும் சின்னக்குட்டியும்' போல என்று சொல்லுகின்ற வழக்கம்.

எங்கள் ஊரில் ஒருவன், தான் விரும்பிய பெண்ணைத் திருமணஞ் செய்வதற்காக, அப்பெண்ணுக்கு வசியமருந்து கொடுக்க முயன்றான். வசிய மருந்தை வெற்றிலை பாக்குக்குள் வைத்துக் கொடுக்கும்படி ஒரு பெண்ணிடம் கொடுத்தனுப்பினான்.

அது எப்படியோ மாறி அப்பெண்ணின் சகோதரனுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டது. வசிய மருந்து வைக்கப்பட்ட வெற்றிலை பாக்கைச் சாப்பிட்ட அவன், அன்றிலிருந்து வசிய மருந்து கொடுத்தவனுடன் இணைபிரியாது சுற்றத்தொடங்கினான்.

இதைப்பார்த்த என் தந்தையார், அவர்களை சவாரித்தம்பரும் சின்னக்குட்டியும் என்று கூறுவர். 'சவாரித்தம்பரும் சின்னக்குட்டியும் சிரித்திரன் ஆசிரியர் படைத்த அற்புதமான பாத்திரங்கள். அந்தப் பாத்திரங்களின் வெற்றிக்கு இதைவிட வேறென்ன சான்றுவேண்டும்.

எங்கள் வீட்டில் 'சிரித்திரன்' கலகலப்பை ஊட்டத் தொடங்கிய காலத்தில், நான் க.பொ.த (உ/த) கல்விகற்றுக்கொண்டிருந்தேன், எனது மூத்த சகோதரர் ஒருவர் கலைப்பட்டப்படிப்பை (B.A) முடித்துவிட்டு, உத்தியோகத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார். அவர்தான் சிரித்திரன் சஞ்சிகையை ஒழுங்காக வாங்குவார்.

சிரித்திரனில் ஆசிரியர் ஒரு படத்தை வரைந்து, அப்படத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு நகைச்சுவைச் சிறுகதை எழுதி அனுப்பும்படி போட்டி வைத்திருந்தார்.

படத்தில் ஒரு லோங்ஸ் போட்ட இளைஞனை, புடலங்காய்களைத் தோளிலும், மற்றும் மரக்கறிவகைகளை பை ஒன்றிலும் தூக்கிக்கொண்டு கவலையோடு நடந்து வருவது போல காட்சி இருந்தது.

'சோமு சம்சாரியாகிவிட்டான்' என்ற தலைப்பில் எனது மூத்த சகோதரர் நா.தியாகராஜா ஒரு சிறுகதை எழுதி, சிரித்திரன் போட்டிக்கு அனுப்பிவைத்தார். அவர்தான் சிரித்திரனை கிரமமாக வாங்கி வீட்டில் யாவரும் வாசிக்க வழி செய்தவர்.

அவரது 'சோமு சம்சாரியாகிவிட்டான்' கதை முதற்பரிசு பெற்று சிரித்திரனில் பிரசுரமானது எங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சி, பெருமை. அப்பா பலருக்கும் அந்த இதழைக் காட்டி மகிழ்ந்தார்.

நான் சிரித்திரன் ஐயாவோடு அறிமுகமாகியது இதற்கு ஏழு ஆண்டுகளின் பின். அவர் அக்கதையை ஞாபகம் வைத்திருந்து என்னோடு கதைத்ததைப்பார்த்து, அவரது ஞாபகசக்தியை எண்ணி வியந்துபோனேன்.

1979 ஆம் ஆண்டு முற்பகுதி என நினைக்கிறேன். அப்போது நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இறுதி ஆண்டு மாணவன்.

இப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளராக இருக்கும் கலாநிதி சி.சிவலிங்கராஜா எனக்கு அடுத்த தொகுதி இளைய மாணவன். அவர் எனது ஒரு நல்ல நண்பர்.

அவரோடு சேர்ந்து காங்கேசன்துறை வீதியிலி ருந்த சிரித்திரன் காரியாலயத்திற்குச் சென்றேன்.

ஒரு சிறிய இடம், சிறிய அச்சு யந்திரம், இருபணியாட்கள் - எனகது ஆச்சரி யமாக இருந்தது. இந்தச் சிறிய வித்திலிருந்து தான் இந்தப் பெரிய ஆலமரம் உருவாகிறதா?

சிரித்திரன் ஐயாவை அன்றுதான் முதன் முதல் நேரில் சந்தித்தேன். சிவலிங்கராஜா-சிரித்திரன் சிறுகதைப்போட்டி ஒன்றில் இரண்டாம் பரிசுபெற்றவர். 'ஒரு பொழுது மையலாகிறது' என்ற அவரது சிறுகதை அப்பரிசைப் பெற்றது. சிவலிங்கராஜாவிற்கு ஐயாவோடு பழக்கம் ஏற்பட்டிருந்தது.

நான் ஒரு கணித - புள்ளிவிபர மாணவன். இருப்பினும், என் ஈடுபாடுகள் முழுவதும் தமிழ் இலக்கியத் துறையில்தான் இருந்தன.

என்னைப்பற்றிச் சொல்லி சிவலிங்கராஜா அறிமுகப்படுத்தியதும், என்னை நன்றாக உற்றுப்பார்த்த ஐயா - 'தமிழ் இலக்கியத்தில் நகைச்சுவை இருக்கிறதா?' என்று கேட்டார். 'நான் நிறையவே இருக்கிறது' என்று சொன்னேன்.

தான் சில பண்டிதர்களிடம் இலக்கியத்தில் நகைச்சுவை என்ற தலைப்பில் நகைச்சுவைக் கட்டுரை எழுதித் தரும்படி கேட்டதாகவும், இலக்கியத்தில் எங்கே நகைச்சுவை இருக்கிறது என்று சொல்லி யாரும், எழுதித் தராமல் விட்டதாகவும் சொன்னார்.

அவரின் வேண்டுகோளுக்கிணங்க 'இலக்கியத்தில் நகைச்சுவை' என்ற தலைப்பில் சே.நா.தர்மராசா என்ற என் சொந்தப் பெயரில் கட்டுரை எழுதத் தொடங்கினேன்.

பழந்தமிழ் இலக்கியக் காட்சிகளைச் சமகாலத்தோடு ஒப்பிட்டு எழுதினால் நன்றாக இருக்கும் என, எனது இலக்கியத்தில் நகைச்சுவை கட்டுரைகளால் கவரப்பட்ட ஐயா என்னிடம் கூறினார்.

அவரின் வேண்டுகோளுக்கிணங்க நான் எழுதிக்கொடுத்த வேறுகட்டுரைகளை 'இலக்கியச் சிமிழ்' என்ற ஒரு பகுதியில் 'அகளங்கன்' என்ற எனது புனைபெயரில் அழகாக வெளியிட்டு வந்தார்.

'இலக்கியச் சிமிழ்' வெளிவரத்தொடங்கிய காலத்தில் எனது 'வாலி' - கொலைச்சரமும் கேள்விச்சரமும் என்ற கம்பராமாயண ஆய்வுக் கட்டுரை ஈழநாடு வாரமலரில் தொடராக வெளிவந்து, எனது அகளங்கன் என்ற புனைபெயர் பிரபலம் பெற்றுவிட்டதால், 'இலக்கியச் சிமிழ்' கட்டுரைகளை மக்கள் மிகவும் ஆவலுடன் வாசித்தனர்.

பின்னர் 'வாலி' நூல்வடிவம் பெற்று இரு பதிப்புக்களைக் கண்டது. இலக்கியச் சிமிழிலும் சில பகுதிகள் பின்னர் நூல்வடிவம் பெற்று இருபதிப்புக்களைக் கண்டது குறிப்பிடத்தக்கது.

சிரித்திரன் குடும்பத்தில் நானும் ஒருவனாகி, ஐயா அம்மா என்றே சொல்லிப்பழகி, அவர்கள் வீட்டில் உணவு உண்டு, சிலவேளைகளில் அங்கேயே தங்கி இரவிரவாக உரையாடி, - நினைத்துப்பார்க்க கவலையும் மகிழ்ச்சியும் போட்டிபோடுகின்றன.

வவுனியாவிலிருந்து சிரித்திரன் ஐயாவைக் கண்டு கதைப்பதற்காகவே அடிக்கடி யாழ்ப்பாணம் செல்வேன். ஐயாவைப்பற்றி என்ன சொல்வது, எப்படிச் சொல்வது, சொல்ல முடியுமா? சொல்லில் முடியுமா?

சிந்தனைச் சிற்பியாக விளங்கிய அவரின் சிந்தனையில் ஊற்றெடுத்துப் பிரவாகித்த சிரிப்புக்கலந்த கருத்து அமுதத்தை பருகாதவர் யாருண்டு.

வீரகேசரியில் கருத்துச் சித்திரம் வரைந்து வந்த காலத்தில், நாளாந்தம் கருத்துச் சித்திரம் வரைந்து அனுப்புவார். மாலை யாழ்ப்பாணத்திலிருந்து வீரகேசரி, அலுவலகத்திற்கு கொண்டுபோய் கொடுக்கும் பேறு சில சமயங்களில் எனக்குக் கிடைக்கும். சிலவேளை ஐயாவும் நானும் சேர்ந்து செல்வோம்.

ஒரு கருத்துச்சித்திரத்தைக் கொடுப்பதற்காகச் சென்றுவரும் நேரத்தில், அடுத்த கருத்து அவர் உள்ளத்தில் உருவாகிவிடும். அன்றாடம் காணுகின்ற நிகழ்ச்சிகளே அவரது சிந்தனைக்குள் புதுக்கருத்துக்களை உருவாக்கிவிடுகின்றன. அவற்றை அவர் அசைபோட்டு அசை போட்டு மறுநாள் அற்புதமான கருத்துச் சித்திரமாக ஆக்கிவிடுவார்.

அவருக்கிருந்த தன்னம்பிக்கை மிகமிக அதிகம். 51/2 மணிக்கு முதல் வீரகேசரிக்குக் கொடுக்கவேண்டுமென்றால், சிலவேளை மாறி மாறி யாராவது வந்து கதைத்துக்குழப்பினாலும், கோபங்கொள்ளாது அவர்களோடு அன்பாக உரையாடி உரையாடி படமும் வரைந்து விடுவார்.

வாசகர்களோடு அல்லது தன்னிடம் கதைக்க வருபவர்களோடு எப்பொழுதும் அன்பாகவே கதைப்பார். கோபத்தை அவரின் முகத்தில் காணவேமுடியாது. அப்படி ஒரு அற்புதமான மாமனிதர். சலிப்பு, விரக்தி என்றெல்லாம் தமிழிலுள்ள வார்த்தைகள் அவருக்குப் பயன் பட்டதில்லை.

நல்ல இசைஞானம் மிக்கவர். தியாகராஜ பாகவதரின் பாடல்களையும் கர்நாடக சங்கீதப் பாடல்களை யும் மெய்மறந்து ரசிப்பார். நாதஸ்வரம் அவருக்குப் பிடிக்கும். பாடல்களைக் கேட்டு ராகத்தைச் சொல்லிவிடுவார்.

அவருக்குப் படம் வரைவதிலே இருந்த பெருவிருப்பும், மதிப்பும் அவரது கையிலே அவர் அணிந்திருந்த மோதிரத்தின்மூலம் நான் தெரிந்துகொண்டேன்.

தூரிகையும், தட்டும் சேர்ந்த வடிவத்தில் அவர் மோதிரம் ஒன்றை அணிந்திருந்தார். அதைப்பற்றி நான் கேட்டபோது, படம்வரைகையில் தனக்கிருக்கும், ஆத்மாத்த விருப்பத்தைச் சொன்னார்.

ராதேயன், திக்கவயல், சுதாராஜ், சரா.பா. சர்மா, சுகுமார், பொன்பூலோகசிங்கம் மற்றும் பலர் பல்வேறுவகைப்பட்ட கருத்துக்களைக் கொண்டவர்கள், வேறுபட்ட கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர்கள் - அங்கு வந்து அவரோடு உரையாடிச் செல்வார்கள்.

யாவரோடும் அன்பாக உரையாடும் அவரிடம் ஒருதடவை கேட்டேன் 'அது எப்படி உங்களால் இப்படி யாவருடனும் ஒத்துப்போக முடிகிறது' என்று,

அவர் சொன்னார் - 'அகளங்கன் வீணையை மடியிலை வச்சு அணைச்சுத்தடவி வாசிச்சாத்தான் இனிய நாதம் வரும். புல்லாங்குழலை உதட்டோடு பொருத்தி, கொஞ்சி வாசிச்சாத்தான், இனிய நாதம் வரும். இதைத் தெரிந்து கொண்டால், யாரோடும் முரண்படத் தேவையில்லை என்றார்.

எனது இலக்கியத் தேறல் நூலின் பின்பக்கத்தில் அவரின் எழுத்துக்களால், அலங்கரிக்கவேண்டும் என்று, அவரிடம் கேட்டேன். மிக அருமையாகச் சுருக்கமாக எழுதித்தந்தார். அவரது இலக்கியப் பார்வையின் நுட்பத்தையும் ஆழத்தையும் அதிலிருந்து கண்டு கொண்டேன்.

'உடலின் கதை சொல்வதல்லக் கலை உள்ளத்தின் கதை சொல்வதே உயர்ந்த கலை. திரௌபதியின் துகில் உரியப்பட்டது உள்ளத்தின் கதை சொல்வதற்கே' எனத் தொடங்கி அருமையாக அவர் எழுதியிருந்தார்.

அவரது வீடு பண்பாட்டின் இருப்பிடமாகத் திகழ்ந்தது. அவரது வீட்டுக்கு வந்து செல்லுகின்ற எல்லா எழுத்தாளர்களும் நல்லவகையில் உபசரிக்கப்படுவார்கள்.

ஐயாவின் உலகமே தனி. சிலவேளைகளில் கற்பனை வானில் சஞ்சரிப்பார். திடீரென நடைமுறை யதார்த்த உலகிற்குத் திரும்பிவந்துவிடுவார். சபைகளுக்குச் செல்வது மேடைகளில் ஏறுவது அவருக்குப் பிடிக்காது. அத்தோடு மிகவும் கூச்சசுபாவம் கொண்டவர். தன்னை யாராவது புகழ்ந்தால் மிகவும் கூச்சப்படுவார். தற்பெருமை பேசியறியார்.

அவரது துணைவியார் அவருக்கு ஏற்ற அற்புதம். ஒரே ராசி - மகரராசி இருவருக்கும். அதனால் ஒரேகுணம். சிரித்திரன் வெளிவருவதில் பெரும்பங்கு அவருடையது. சிரித்திரன் சஞ்சிகையை குடிசைக் கைத்தொழில் என்று கூடச் சொல்லாம். அவரது மனைவியார் சிறிது சினந்திருந்தாலும் சிரித்திரன் என்றோ தடைப்பட்டிருக்கும் - சாடிக்கேற்ற மூடி.

1982 ஆம் ஆண்டில் பாரதி நூற்றாண்டு விழா உலகெங்கும் கொண்டாடப்பட்டகாலத்தில் - சிரித்திரனின் 12 மாத இதழ்களையும் பாரதி நினைவு இதழ்களாகக் கொண்டுவர விரும்பினோம். ராதேயனும் நானும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்தோம்.

இதழ்கள் சிறப்பாகவெளிவந்துகொண்டிருந்தன. பாரதிபற்றிய பல்வேறு ஆய்வுகள் சிரித்திரனில் வெளிவந்தன. சிரித்திரன் அம்மாவும் பாரதிபற்றி பல நூல்களையும், பிரசுரத்திற்குவரும் ஆக்கங்களையும் ஆவலோடு படித்தார்.

அம்மா வழமைபோல தனது வீட்டுக் கடமைகளை முடித்து, கோயிலுக்குப் போய்வந்து, எல்லா வேலைகளையும் ஒழுங்காகச் செய்து, சிரித்திரன் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கிவிடுவார். அம்மாவின் திறமையும் பொறுமையும் சாதாரண ஒரு பெண்ணுக்கு வராது. சிரித்திரன் ஐயாவிற்குக் கடவுள் கொடுத்த பிரசாதம் அவர்.

ஒரு நாள் நான் வவுனியாவிலிருந்து சிரித்திரன் அலுவலகத்திற்குச் சென்றேன். ஐயா எங்கோ வெளியே போயிருந்தார். அம்மா மிகவும் கவலையோடு இருந்தார். 'என்னம்மா நடந்தது என்ன சொல்லுங்கோ...' என்றேன்.

மிகவும் கவலையோடு பெருமூச்சு விட்டு 'இந்த ஆள் ஏன் அங்கபோனது...' என்றார் எனக்கு விளங்கவில்லை. மீண்டும் கேட்டேன். 'என்ன நடந்தது? ஆர் போனது?' போகவேண்டாம் போகவேண்டாமென்று சொல்லவும் கேக்காமல் இந்த ஆள் ஏன் அங்கபோனது' எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

யாருக்கு என்ன நடந்ததோ என்று எனக்கும் பரபரப்பு படபடப்பு. ஐயாவும் வீட்டிலில்லை, அவரது மகனும் வெளிநாட்டிலே. 'என்னம்மா நடந்தது சொல்லுங்கோ...' என்று மீண்டும் கேட்டேன்.

மிகவும் கவலையோடு அவர் சொன்னார். 'இந்த ஆள் ஏன் ஆனைக்கிட்டப் போச்சுது' எனக்கு அப்போது விளங்கவில்லை.

'ஆர் யானைக்குக் கிட்டப்போனது என்ன நடந்தது...' என்று விசாரித்தேன்.

'பாரதி தான்' என்றார் சலிப்போடும் வேதனையோடும். பாரதியாரை இவ்வளவு உரிமையோடு நேசித்துக் கவலைகொண்ட இன்னொருவரை நான் இதுவரையில் கண்டதில்லை.

யாழ்ப்பாண மருத்துவமனையில் கிடந்த நோயாளி ஒருவர் தனது தந்தையார்மூலம் சிரித்திரன் ஐயாவிற்கு ஒரு கடிதம் கொடுத்திருந்தார். 'நோயின் காரணமாக எனக்கு ஏற்பட்டிருககின்ற வலியையும் கவலையும் மறக்க சிரித்திரன் இதழ்களே சிறந்த மருந்து. தயவு செய்து சில இதழ்களைக் கொடுத்து விடுங்கள்' என்ற சாரப்பட அந்தக்கடிதத்தில் இருந்தது.

அவருக்கு சில இதழ்களை அனுப்பி வைத்து, ஐயா மிகவும் மகிழ்ச்சியோடு அதை எனக்குச் சொன்னார். சில மருந்துகளை இனிப்போடு கலந்துகொடுக்கின்ற வைத்தியர்களைப் போல கருத்து மருந்துகளை நகைச்சுவைத் தேனில் கலந்துகொடுத்த சமூக வைத்தியர் அவர்.

தன் சஞ்சிகைக்குப் பொருத்தமில்லாத கட்டுரையை, ஆக்கத்தை அவர் சிரித்திரனில் போடமாட்டார். சிபார்சுகளின் பேரிலேயோ முகமனுக்காகவோ ஆக்கங்களை தனது சஞ்சிகையில் பிரசுரிக்கமாட்டார்.

எனது பல கட்டுரைகளை அவர் பிரசுரிக்கவில்லை. நானும் ஒருநாளும் இது நல்லது, அதைப்போடுங்கள், இதைப் போட்டிருக்கலாமே என்று கதைப்பதில்லை. பட்டும்படாமலும் எனது கட்டுரை பற்றிக் கதைத்திருப்பேன். அவர் கதையை மாற்றிவிடுவார்.

நான் நிறையவே எழுதிஎழுதி அனுப்பிக் கொண்டிருந்ததால், எனது ஏதோ இரு கட்டுரையோ, ஆக்கமோ சிலவேளை பலவோ சிரிததிரனில் வெளிவந்துவிடும். சிரித்திரனில் ஐம்பத்தைந்து இதழ்களில் எனது ஆக்கங்கள் வெளிவந்திருக்கின்றன. தொடர்ந்து எல்லா இதழ்களிலும் 1980 - 1984 ஆம் ஆண்டுகளில் எனது ஆக்கங்கள் ஒன்றோ பலவோ பல புனை பெயர்களில் வெளிவந்திருக்கின்றன.

1988 ஆம் ஆண்டில் இந்திய அமைதி காக்கும் படையின் அட்டூழியத்தால் சிரித்திரன் வெளிவரமுடியாமற்போன காலம்வரை, சிரித்திரனில் எழுதினேன்.

ராதேயன் ஈழமுரசில் பணியாற்றிய காலத்தில், சிரித்திரனில் வெளிவராது அங்கு கிடந்த எனது கட்டுரைகள் சிலவற்றைக்கொண்டு போய், ஈழமுரசு பத்திரிக்கையில் அழகாக வெளியிட்டுக்கொண்டிருந்தார். ராதேயன் என் அன்புக்குரிய நண்பர். சிரித்திரன் குடும்பத்தாரின் பாசமிகு பிள்ளை என்றும் சொல்லலாம்.

அந்தக் கட்டுரைகள் பல வாசகர்களையும் கவர்ந்தபோது, ஒருநாள் ராதேயன் ஐயாவிடம் 'நீங்கள் கூடாது என்று கழிச்சுவிட்ட அகளங்கன் கட்டுரையை ஈழமுரசில் எவ்வளவு அழகாகப் போடுறன் நல்ல வரவேற்பு....' என்று சொன்னார்.

உடனே ஐயா சொன்னார். ' நாங்கள் கூடாதெண்டு கழிச்சுவிடேல்லயே, எங்களுக்குப் பொருத்தமில்லையென்டெல்லோ கழிச்சு விட்டனாங்கள்' என்றார்.

வேறு யாராக இருந்தாலும் கிண்டல் பண்ணுவதற்காகவாவது 'நாங்கள் கழிச்சு விட்டதுகளைத்தான் நீங்கள் போடுறியள்' என நக்கல் அடித்திருப்பார்கள்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## அல்கொய்டா உள்ளூர் தலைவர் ஏமனில் கைதுசெய்யப்பட்டார்

(அப்ஜன்)

அல்கொய்டா அமைப்பின் தலைவரான அப்துல்லா ரயூப் ரசிப் ஏமனின் தென்பகுதியான அப்ஜனில் வைத்து பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக படை அதிகாரிகள் தெரிவித்தனர்.



இவருடன் சேர்த்து 12 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படைக்கு தாங்கிகள் மற்றும் ஹெலிகொப்டர்கள் தீவிரவாதிகளைக் கைதுசெய்வதற்குத் துணைபுரிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தீவிரவாதிகளின் தாக்குதல்கள் இப்போது அதிகரித்துள்ளமையால் ஏமனும் பல பாதிப்புகளை எதிர்நோக்கவேண்டியிருந்தது. இதனால், இஸ்லாமிய தீவிரவாதிகளை கைதுசெய்வதில் அமெரிக்கா உதவியளித்துள்ளது.

சென்ற நவம்பரில் ஒசாமா பின்லேடனின் அல்கொய்டா அமைப்பின் அங்கத்தவர்களில் ஒருவரான மொகமட் கமிட் அல் அடால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.




## ஹெயிட்டி தலைநகரில்

# தாக்குதல்களை நிறுத்துமாறு சகாக்களுக்கு பிலிப்பி உத்தரவு!

## அமெரிக்க அழுத்தத்தின் எதிரொலி

ஹெயிட்டி போராளிக் குழுத்தலைவர் 'கை பிலிப்பி' அமெரிக்காவின் அழுத்தம் காரணமாக தாக்குதல்களை நிறுத்துமாறு தனது சகாக்களுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

ஹெயிட்டியில் அமைந்துள்ள அமெரிக்க தூதுவராலயம் போராட்டத்தை நிறுத்துமாறு 'பிலிப்பி'யை வலியுறுத்தியிருந்தது. இதனிடையே, தலைநகரில் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு அமெரிக்க கடற்படை கண்காணிப்பை அதிகரித்துள்ளது.



இதேவேளை, கடந்த புதன்கிழமை ஐக்கிய நாடுகளின் சிறுவர்களுக்கான பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ளும் நிதியம் 30 தொன் நிறையுடைய மருந்துப் பொருட்களை விமானம் மூலம் ஹெயிட்டிக்கு அனுப்பிவைத்துள்ளது.

ஹெயிட்டியின் வடபகுதி நீண்டகாலமாக போராளிக் குழுவின் கட்டுப்பாட்டிலிருந்து வருகிறது.

அத்துடன், அந்தப் பிரதேசத்தில் வெள்ள அபாயமும் காணப்படுகிறது. இதனால், நிவாரணப் பணிகளை அந்த இடத்திற்குகொண்டு சென்று மேற்கொள்ள முடியாதிருந்ததாக ஐக்கிய நாடுகளின் சிறுவர்களுக்கான உதவிப் பணிகளை மேற்கொள்ளும் அமைப்பின் பேச்சாளர் 'மரிக்கி மேர்கடோ' தெரிவித்தார்.

தூய குடிநீரின்றி தலைநகரிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் மக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கிவருவதாக 'ஒஸ்பாம்' எனப்படும் உதவிகளை மேற்கொள்ளும் மற்றுமொரு அமைப்பு தெரிவித்தது.

இவற்றின் மத்தியில் ஹெயிட்டியின் பிரதமர் 'யோவொன் நெப்ரூன்' இடைக்கால அரசொன்றை நிறுவுவதற்கு சமரச முயற்சிகளை மேற்கொண்டுவருகிறார்.

ஹெயிட்டியின் தலைநகரில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் கடந்த மூன்று வாரங்களாக இடம்பெற்ற கொள்ளைகளினால் இதுவரை மூன்று மில்லியன் டொலர்களுக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.



இதனிடையே, போராளிக் குழுத்தலைவர் 'பிலிப்பி' தலைநகரில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதுவரின் இல்லத்திற்கு அழைக்கப்பட்டு தாக்குதல்களை நிறுத்துமாறு கேட்கப்பட்டார்.

மேலும், போராளிகளினால் ஏற்படுத்தப்பட்ட வீதித்தடைகளை அகற்றி ஆயுதங்கள் பொருத்தப்பட்ட வாகனங்களின் உதவியுடன் அமெரிக்கக் கடற்படையினர் காவற் கடமைகளை மேற்கொண்டுவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பல மில்லியன் டொலர் செலவில் ஈ-ராக்கின் பாதுகாப்பு நடவடிக்கை

## போல் பிறீமர் தெரிவிப்பு

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலும் கர்பலாவிலும் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தாக்குதலில் 271 ஷியா முஸ்லிம்கள் கொல்லப்பட்டபின் ஈராக்கின் எல்லைப் பிரதேசங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் முயற்சிகளை அமெரிக்கா மேற்கொண்டுவருகின்றது.



இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாகி, பல மில்லியன் டொலர் செலவில் பாதுகாப்பினைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்தார்.

இதற்கு பல ஆயிரம் எல்லைப் படைவீரர்களையும், வாகனங்களையும் பணியில் ஈடுபடுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

போல் பிறீமர் மேலும் தெரிவிக்கும்போது - 'சனி' முஸ்லிம்களுக்கும் - 'ஷியா' முஸ்லிம்களுக்குமிடையே பிரிவினையை உருவாக்கும் நோக்கில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதென குறிப்பிட்டார்.

மேலும், எல்லைப் பிரதேசங்களை பலப்படுத்துவது தொடர்பான அமெரிக்க நிர்வாகி போல் பிறீமரின் கருத்துக்கு பி.பி.ஸி. செய்தியாளர் 'பவுல் வூட்' பதில் தெரிவிக்கும்போது எல்லைப் பிரதேசங்களை பலப்படுத்துவது இலகுவான காரியமாக அமையாதெனவும் குறிப்பிட்டார்.

ஈராக்கில் பல ஆயிரம் கிலோமீற்றர் நீளமான பிரதேசம் பாலைவனங்களும், மலைகளும் நிறைந்ததாகவும் கடத்தல்காரர்களின் ரகசிய பிரதேசங்களை உள்ளடக்கியதாகவுள்ள ஈராக்கின் எல்லைப் பாதுகாப்பு என்பது இலகுவான காரியமல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே, பள்ளிவாசல்களில் நடைபெற்ற தாக்குதல்களை ஜோர்டானிலிருந்து செயற்படும் அல்கொய்டாவின் அமைப்பாளர் 'அபு முசாப் அல் சார்க் குவாவி' நடத்தியதாக அமெரிக்க ஜெனரல் 'ஜோன் அபிசெயிட்' தெரிவித்தார்.

## இஸ்ரேல் ஹெலித் தாக்குதல் கமாஸ் போராளிகள் மூவர் பலி;

காஸாப் பிரதேசத்தில் இஸ்ரேலிய படையினரால் ஹெலிகொப்டரிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வாகனமொன்றில் பிரயாணம் மேற்கொண்டிருந்த கமாஸின் போராளிகள் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

யூதர்களின் குடியேற்ற பிரதேசமான நெற்சரீமில் தாக்குதல்களை கமாஸ் போராளிகள் அண்மைக் காலத்தில் மேற்கொண்டிருந்தனர் என இஸ்ரேலின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.



கமாஸ் போராளிகளுக்கெதிராக இந்தத் தாக்குதலை மேற்கொண்டதன் மூலம் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய அரசின் பேச்சாளர் 'சுவி பஷ்னர்' தெரிவித்தார்.

மேலும், இந்தச் சம்பவத்தில் தாக்குதலுக்குள்ளான வண்டி தீப்பற்றி எரிந்ததாகவும் பல பலஸ்தீனியர்கள் தீயை அணைக்க முயற்சித்ததாகவும் சம்பவத்தை நேரில் கண்ட விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

## சீன தியனமன் சதுக்க சம்பவ கைதி 'வாங் யூகாய்' விடுதலையானார்

சீனாவில் அரசிற்கெதிராக கருத்துக்களை தெரிவித்ததன் பேரில், 11 ஆண்டுகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவரும், ஜனநாயகக் கட்சியின் ஸ்தாபகருமான 'வாங் யூகாய்' சிறைத்தண்டனையிலிருந்து விடுதலைசெய்யப்பட்டுள்ளார்.




ஐக்கிய நாடுகளின் மனித உரிமை தொடர்பாக ஜெனிவாவில் நடைபெற்ற கூட்டத்தில் இவரின் சிறைத்தண்டனை தொடர்பாக விமர்சிக்கப்பட்டதையடுத்தே 'வாங் யூகாய்' விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலையின் பின் இவர் வைத்திய சிகிச்சைக்காக அமெரிக்காவின் சான் பிரான்ஸ்சிஸ்கோவிற்கு பயணமாகியுள்ளார்.

37 வயதுடைய வாங் 1989 இல் சீனாவின் தியனமன் சதுக்கத்தில் ஒன்றுகூடியிருந்த மக்களின் எழுச்சியை ஒடுக்கமுற்பட்டு பல ஆயிரம் மக்களை சீன அரசு கொன்றொழித்த சம்பவத்தின்போது 'வாங்' மாணவர் தலைவராக அந்த ஊர்வலத்தில் பங்குகொண்டிருந்தார்.

பீக்கிங் பல்கலைக்கழகத்தில் கல்விகற்றிருந்த 'வாங்' ஊர்வலத்தில் பங்குகொண்டமைக்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். பின்னர் 1998 ஆம் ஆண்டு ஜனநாயகக் கட்சியை உருவாக்கியமைக்காக மீண்டும் கைதுசெய்யப்பட்டார்.

சீனாவின் ஆளும் கட்சியான தேசிய மக்கள் காங்கிரஸ் மனித உரிமைகள் தொடர்பான சட்டங்களை அரசியல் அமைப்பில் சேர்த்துக் கொள்வதற்கு அண்மையில் தீர்மானித்தது. இதன் வெளிப்படையாகவே 'வாங்' விடுதலைசெய்யப்பட்டார்.

இது தொடர்பாக பி.பி.ஸியின் செய்தியாளர் 'லுஷ்சா லீம்' தெரிவிக்கும்போது சீனா தனக்கு வேண்டப்படாத மனிதர்களை நாடு கடத்துவதற்கு நோயை ஒரு காரணமாக தெரிவிப்பதனை வழக்கமாகக் கொண்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.

## செப்ரெம்பர் தாக்குதல் குற்றவாளி மீது பிறிதொரு குற்ற வழக்குத் தாக்கல்

(வாஷிங்டன்)

2001 செப்ரெம்பரில் அமெரிக்காவில் இடம்பெற்ற தீவிரவாதிகளின் தாக்குதலில் சம்பந்தப்பட்டவர் என்ற குற்றத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட 'மோனீர் அல் மொறசா டெக்' மீது பிறிதொரு குற்ற வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



இவர் கைது செய்யப்பட்டு ஜேர்மனியில் சிறைவைக்கப்பட்டிருந்தார். கடந்த வியாழக்கிழமை ஜேர்மன் நீதிமன்றம் இவர் மீது சுமத்தப்பட்டிருந்த முன்னைய குற்றச்சாட்டுக்களை நிராகரித்து புதிய குற்றச்சாட்டுக்களை சுமத்தி வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தது.

செப்ரெம்பர் தாக்குதலில் 3000 பேர்வரை கொல்லப்படுவதற்கு துணைபுரிந்தார் என்பது இவர் மீது சுமத்தப்பட்ட பாரிய குற்றச்சாட்டாகும். அதன்பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டார்.

ஆனால், இதேவிதமான குற்றச்சாட்டுகளின் பேரில் கைதுசெய்யப்பட்ட மொறோக்கோ நாட்டைச் சேர்ந்த அப்துல் கனி மொசைதீ அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

## பணயக் கைதி விவகாரத்தில் ஏரியல் ஷரோன் பாரபட்சம்

(இஸ்ரேல்)

கசபுல்லா தீவிரவாதிகளினால் சிறைவைக்கப்பட்டிருந்த பணயக் கைதியான தெனன்பவுமை விடுவிப்பதில் இஸ்ரேல் பிரதமர் ஷரோன் தவறான முறையில் செயற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

லெபனானில் கசபுல்லா தீவிரவாதிகளால் 3 ஆண்டுகளாக சிறைவைக்கப்பட்டிருந்த தெனன்பவும் இந்த ஆண்டு கைதிகள் பரிமாற்றத்தின் மூலம் விடுவிக்கப்பட்டிருந்தார்.



இது தொடர்பாக இஸ்ரேல் பத்திரிகை ஒன்று தெரிவிக்கும்போது விடுவிக்கப்பட்ட தெனன்பவுமின் மாமனாரை தனது பண்ணையில் பிரதமர் ஷரோன் 1970 ஆம் ஆண்டுகளில் வேலைக்கு அமர்த்தியிருந்தார் எனவும் அவரது குடும்ப உறவினரை விடுவிப்பதில் தனது செல்வாக்கைப் பிரயோகித்திருந்தார் எனவும் பிரதமர் ஷரோன்மீது குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த இஸ்ரேல் பிரதமர் தனது பண்ணையில் வேலைக்கமர்த்தியவர்களின் உறவினர்களின் விபரங்கள் தெரியாதென குறிப்பிட்டிருந்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# திக்கம் வடிசாலை ஊழியர்களின் வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்தது!

(வடமராட்சி)

திக்கம் வடிசாலை பணியாளர்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு நேற்று நள்ளிரவு முதல் பணியாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

கடந்த நான்கு நாட்களாக திக்கம் வடிசாலை பணியாளர்கள் ஏழு கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்த தீர்மானித்த பணியாளர்கள் வடமராட்சி அரசியற்துறை பொறுப்பாளர் தயாவை அணுகி தமது நீதியான போராட்டத்திற்கு உதவுமாறு கேட்டனர்.

இதற்கமைய, வடமராட்சி அரசியற்துறை பொறுப்பாளர் தயா இந்த விடயமாக சம்பந்தப்பட்ட பனை அபிவிருத்திச்சபை தலைவருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டதற்கமைவாக பனை அபிவிருத்திச் சபை நிர்வாக உத்தியோகத்தர்கள், சிரேஷ்ட பணியாளர்கள், பொது முகாமையாளர் சிவநேசன் ஆகியோருடன் வடிசாலை ஊழியர்களையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

பேச்சுவார்த்தையின் பயனாக மேலதிகநேர வேலைக்கான கொடுப்பனவை தவிர ஏனைய கோரிக்கைகள் அனைவரினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனால் இதற்கான தீர்வுகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன.

மேலதிக வேலைநேரக் கொடுப்பனவு கோரிக்கைக்கு மட்டும் ஒரு மாதத்திற்குள் தீர்வை ஏற்படுத்தித் தருவதாக வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா அறிவித்த வாக்குறுதியை அடுத்து உடனடியாக பணியில் தாம் ஈடுபடவுள்ளதாக பணியாளர்கள் மேலும் தெரிவித்தனர். (13)

# வடமேல் மாகாணசபைத் தேர்தல் இரு குழுக்கள் வேட்புமனுத்தாக்கல்

வடமேல் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இரண்டு சுயேட்சைக்குழுக்கள் நேற்று வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தன.

ஏ.எம்.சலீம்கான் தலைமையிலான ஒரு சுயேட்சைக் குழுவும், ஏ.கே.சாஜஹான் தலைமையிலான ஒரு சுயேட்சைக் குழுவுமே வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ததாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

வடமேல் மாகாணசபைத் தேர்தல் காலத்தில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு நான்கு விசேட பொலிஸ் குழுக்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன. தேர்தல் வன்முறைகளைத் தடுக்கும் பணியில் மோட்டார் சைக்கிள் அணியும் ஈடுபடுத்தப்படவிருப்பதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அசோக ரத்னவீர தெரிவித்தார்.

# புதிய இடதுசாரி முன்னணி தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு

(கொழும்பு)

புதிய இடதுசாரிமுன்னணி தேர்தல் விஞ்ஞாபனத்தை நேற்று வெளியிட்டது.

நேற்றுநடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இந்தக் கொள்கைப் பிரகடனம் வெளியிடப்பட்டது.

பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

மக்களின் வாழ்க்கைச் செலவு அடிப்படையில் சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும்.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக அமைப்பின் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதன் காரணமாக நாட்டில் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது.

புதிய இடதுசாரி முன்னணி தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை என்றுமே ஏற்றுக்கொள்கின்ற ஒரு கட்சியாகும். நாட்டில் எழுந்துள்ள இன முரண்பாடுகள் சமாதான அடிப்படையில் நீக்கப்பட வேண்டும்.

இடதுசாரி முன்னணி மனித உரிமை மேம்பாட்டின் மூலம் - நாட்டின் ஜனநாயகத்தை மேம்படுத்த முயல்கின்றது.

ஜனாதிபதி முறையும் ஒழிக்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டை கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன நடத்தினார்.

# யுத்த சூனியப் பிரதேசத்தில் வாக்களிப்பதற்கு ஒழுங்குகள்

## மன்னார் அரச அதிபர் தகவல்

(மன்னார்)

இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாழும் மக்களுக்கு யுத்த சூனியப் பிரதேசத்தில் வாக்களிக்க ஒழுங்குகள் செய்யப்படலாமென மன்னார் மாவட்ட அரச அதிபர் தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் சுமார் பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர். எனவே இவர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக உயிலங்குளம் சோதனைச் சாவடிகளுக்கருகில் 12 வாக்குச் சாவடிகளும், படையினரின் மடுச்சந்தி காவலரணுக்கருகில் 3 வாக்குச் சாவடிகளும் அமைக்கலாமெனவும், அவர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (201)

# தேர்தல், அரசியல் வன்முறைகளை அனைவரும் குறைக்க வேண்டும்!

(கொழும்பு)

தேர்தலின்போது, அரசியல் வன்முறைகளைக் குறைத்துக்கொள்வதற்கு அனைத்துக் கட்சிகளும் இணக்கப்பாடு ஒன்றுக்கு வரவேண்டும் என குற்றங்களைத் தடுப்போர் தொடர்பான தேசிய ஆலோசனை குழுத் தலைவர் பேராசிரியர் விமல ரத்னதேரர் தெரிவித்தார்.

உள்துறை அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

வன்முறைகள் அற்ற தேர்தல் ஒன்றை நடத்த வேண்டிய பொறுப்பு அரசியல் கட்சிகளிடம் உள்ளது.

தேர்தல் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் ஏனைய தேர்தலுடன் தொடர்புடைய அதிகாரிகள் பொறுப்புடன் செயல்படவேண்டும். இதைவிட அனைத்து வாக்காளர்களினதும் தேவைகளை சரியான முறையில் நிறைவேற்ற வேண்டியது முக்கிய தேவையாகும் எனத் தெரிவித்தார்.

# சிறுபான்மை அரசாங்கம் ஜனாதிபதி முறையை மாற்ற முயல்வது சட்டத்திற்குப் புறம்பான செயலாகும்!

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுபான்மை பலத்தைக் கொண்ட அரசாங்கத்தின் கீழ் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்றுவதற்கு முயற்சித்து வருகிறது.

இது சட்டவிரோதமான செயலாகும் என்று நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் ஜீ.எல்.பிரீஸ்,

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பலம் இல்லாமல் அகற்றமுடியாது.

ஆனால், அவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுவது அரசியலமைப்புச் சட்டத்துக்கு மாறான விடயமாகும்.

சிறுபான்மை அரசாங்கத்தின் கீழ் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை அகற்ற முயற்சிக்குமானால் அதற்கு எதிராக - ஐக்கிய தேசியக்கட்சி முழுமையான எதிர்ப்பை வெளியிடும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப்பட்டியல் முறை கேடானதாகும். முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் பெயர் தேசியப்பட்டியலில் இடம் பெறாத போதும் அவரது பெயர் அதில் இடம்பெற்றிருப்பதாக கூறப்படுவது இதற்கு உதாரணமாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஆணையைப் பயன்படுத்த மக்களுக்கு நல்ல சந்தர்ப்பம்

(கொழும்பு)

மக்கள் தமது ஆணையை சிறந்த முறையில் பயன்படுத்தும் சந்தர்ப்பம் இம்முறை தேர்தல் ஊடாக கிடைத்துள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் தேர்தல் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

இம்முறை தேர்தலின்போது, அறிவுபூர்வமாக சிந்தித்து வாக்கைப் பயன்படுத்த வேண்டும். தற்போது, மக்களின் ஆணையை முழுமையாக நடைமுறைப்படுத்த சந்தர்ப்பம் வழங்கியுள்ளோம். பலமிக்க வாக்கு அடையாளத்தைப் பயன்படுத்தும்போது, சிந்தித்து வாக்களியுங்கள். மிகவும் தூரநோக்குடன் சிந்தித்து வாக்களியுங்கள் முழு நாட்டையும் பற்றி சிந்தித்து நாட்டை யாரால் காப்பாற்ற முடியும் என்பதைப் பற்றிச் சிந்தித்து அவருக்கே வாக்களியுங்கள் எனத் தெரிவித்தார்.

# கிழக்கு நெருக்கடி...

குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாகவும் - இந்தக் கலந்துரையாடல் சுமுகமான சூழ்நிலையில் இடம்பெற்றதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து இந்தச் சந்திப்பில் விளக்கிக் கூறிய அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்,

கிழக்கு மாகாண தளபதி ரமேஸ், கிழக்கு மாகாண அரசியற் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஏனைய முக்கிய உறுப்பினர்கள், தலைவர் பிரபாகரன் மற்றும் தலைமைப்பீடத்துடன் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றனர். தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி தற்காலிகமானதே, இதற்கான தீர்வு மிகவிரைவில் எட்டப்பட்டுவிடும் என்று குறிப்பிட்டார்.

இந்தச்சந்திப்பின் முடிவில், மிகக்குறுகிய கால அவகாசத்தில் சந்திப்பை ஏற்படுத்தி ஆரோக்கியமான கலந்துரையாடலை மேற்கொள்ள உதவியமைக்காக அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ்ஹொவ்டே நன்றி தெரிவித்தாகவும் புலிகள் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

# எலும்புக்....

அவற்றைக்கொண்டு இரண்டு மனித எலும்புக்கூடுகள் என அடையாளப் படுத்திக்கொண்டோம். தொடர்ந்தும் வெடிபொருள் அகற்றும் பணியில் ஈடுபட்டபோது, பெண்களுக்குரிய உள்ளாடைகள் சிலவும் இராணுவச் சீருடை போன்ற உடுப்பும் மீட்கப்பட்டன.

உடனடியாக இது தொடர்பாக எமது தலைமைப்பீடத்திற்கு அறிவித்ததோடு பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் தகவல் கொடுத்து அவர்களை வரவழைத்து அவற்றை ஒப்படைத்தோம் எனத் தெரிவித்தார். (ப)

# ஈ.பி.டி.பி...

சாலையிலும், மற்றைய மூவரும் கல்முனை வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வெளியேறினர்

இந்த சம்பவம் தொடர்பாக அம்பாறை மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி ரி.ஜி.எல் விஜயவிக்கிரம தலைமையிலான பொலிஸ் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (07)

# ஐ.தே....

வேண்டும். சமாதானம் ஒன்று இலங்கைத் தீவில் இல்லாது பொருளாதாரத்தினை கட்டியெழுப்ப முடியாது.

அரசியல் தீர்வு ஒன்று ஏற்படுத்த முடியுமாயின் அது போர்நிறுத்த உடன்படிக்கை மூலமே முடியும். இந்தப்பணி ஐக்கிய தேசியக் கட்சியால் மாத்திரமே செயற்படுத்த முடியும் என நான் நினைக்கின்றேன் என பிரதமர் தெரிவித்தார்.

# வன்செயல்....

கொலைச்சம்பவங்கள் நடந்துள்ளன. இது தேர்தல் நடவடிக்கைகளை குழப்பும் முயற்சியாகும்.

அரசியற் கட்சிகளின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் விதத்தில் அந்தக் கட்சிகள் மீது நேரடியாகத் தாக்குதல் நடத்தப்படுகிறது.

ஐரோப்பிய யூனியனின் அவதானிப்பாளர்கள் இலங்கைக்கு தேர்தல் கண்காணிப்பாளர்களாக வந்தால் இந்தக்காலப்பகுதியில் நடந்தவற்றின் மூலம் இங்குள்ள நிலமைகளை அறிய முடியுமெனவும் தெரிவித்தார்.

# வட.கிழக்கில்...

இங்கு படையினர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், போர்நிறுத்த கண்காணிப்பு குழு ஆகியோரின் உதவியுடன் பொருத்தமான பொதுவான இடத்தில் தேர்தல் நடத்தப்படலாம்.

வாக்காளர்கள் தேர்தலில் பங்குபற்றி தமது பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்யும் உரிமை மக்களுக்கு மறுக்கப்படாத ஒரு உரிமையாகும்.

ஓமந்தை, முகமாலை, உயிலங்குளம் பகுதிகளில் தேர்தல் சாவடிகளை அமைப்பதற்கு படையினர் பின்நோக்கி நகர்த்தப்படலாம். இத்தீர்வு நடைமுறைப்படுத்த முடியாதாயின் இருதரப்பினருக்கும் இடைப்பட்ட பொதுவான பிரதேசம் முன்னுரிமை அடிப்படையில் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு பொதுத் தேர்லுக்காக வாக்குச்சாவடிகள் அமைக்கப் பயன்படுத்தலாம்.

தங்களிடம் தயவாக கேட்பது அரசகட்டுப்பாடு இல்லாத பகுதிகளில் வாழும் மக்கள் தமது ஜனநாயக உரிமையின்படி பொதுத் தேர்தலில் பங்குபற்ற தேவையான ஏற்பாடுகளை செய்துகொடுக்க வேண்டும்.

இல்லாவிடின் அரச கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் வாழும் ஏராளமான மக்களின் வாக்களிக்கும் உரிமை அப்பட்டமாக மறுக்கப்பட்டதாகவே இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் பிரதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தேர்தல் ஆணையாளர் ஆகியோருக்குப் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# திருமலையில் லொறி....

இந்த விபத்தை தொடர்ந்து உப்புவெளிப்பகுதியில் பதற்றநிலமை உருவாகியது பெருமளவிலான பொலிஸாரும் இராணுவத்தினரும் அங்கு குவிக்கப்பட்டனர்.

விபத்துக்குள்ளான லொறிச் சாரதி 500மீற்றர் தொலையில் உள்ள பொலிஸ் நிலையத்தில் சரணடைநதார்.

இவரை பொலிஸார் தற்போது விளக்க மறியலில் வைத்துள்ளனர்.

சாரதியின் வீட்டுக்கு தற்போது பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற திருகோணமலை போர்நிறுத்த கண்காணிப்புகுழு பிரதிநிதிகள், தமிழ் கூட்டமைப்பு வேட்பாளர்கள் மக்களுடன் கலந்துரையாடி பதற்ற நிலமையைத்தணிக்க ஏற்பாடு செய்தனர். (04,10)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.03.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.